மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 4 | 15 - 10 - 55 | இதழ் 1

இயற்கையின் கூறுபாடுகளை அறிய மாட்டாமல், பயத்தின் ாரணமாக மக்கள் கொண்ட மூடக் காள்கைகளை ஏற்க மறுத்துப், திய கருத்தை வெளியிட்டுப், குத்தறிவுப் பாதைக்கு வழி ாட்டிச் சென்ற கிரேக்கப் பேரறிவாளர்

எபிக்கூரசு

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

எழுதும் ஆற்றல்

உலகின் சிறந்த எழுத்தாளர்களை எடுத்துக்கொண்டால், ஒவ்வொருவரும் தம் சிறந்த எழுத்தோவியங்களை எழுதுவதற்குத் தமக்கென்று சில சூழ்நிலைகளையும் போக்குகளையும் ஏற்படுத்திக் கொள்பவர்களாகவே இருந்துவரக் காண்கிறோம்.

சிறந்த எழுத்தாளர்களில் சிலர் குப்புறப் படுத்துக்கொண்டு எழுதும் பழக்கத்தையும், வேறு சிலர் சாய்வுநாற்காலியில் சாய்ந்துகொண்டு எழுதும் பழக்கத்தையும், மற்றுஞ் சிலர் அட்டாணிக்கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்த நிலையில் துடைமீது ஏட்டை வைத்துக்கொண்டு எழுதும் பழக்கத்தையும், இன்னுஞ்சிலர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மேசையில் ஏட்டை வைத்துக்கொண்டு எழுதும் பழக்கத்தையும், வேறுசிலர் கீழே உட்கார்ந்துகொண்டு சிறிய சாய்வு மேசையில் ஏட்டை வைத்துக்கொண்டு எழுதும் பழக்கத்தையும் பொதுவாகக் கொண்டிருக்கக் காண்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் பல்வேறு நிலைகளிலும் இருந்துகொண்டு எழுதக்கூடியவர் என்றாலும், உட்கார்ந்துகொண்டு காலின்மேல் காலை மடக்கித் தூக்கிப் போட்டுக்கொண்டு, ஒரு புத்தகத்தையோ அல்லது அட்டையையோ துடைமீது வைத்துக்கொண்டு, அதன்மீது தாள்களை அடுக்கி வைத்துக்கொண்டு எழுதும் பழக்கத்தைத்தான் அவர்களிடம் எப்பொழுதும் பொதுவாகக் காணமுடியும்.

பலரும் எழுத ஆரம்பித்துவிட்டுப், பிறகு சிந்தித்துச் சிந்தித்து மெல்ல விட்டுவிட்டு எழுதுவார்கள். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களோ எழுதுவதற்கு முனனால் சிந்திக்கவேண்டியதெல்லாம் சிந்தித்துவிட்டு, எழுதலாம் என்ற எண்ணம் பிறந்தவுடன் மடமடவென்று வரைந்து தள்ளிக்கொண்டே இருப்பார்கள்; பக்கங்கள் புரண்டுகொண்டே இருக்கும்; பெரும்பாலும் அடித்தல் திருத்தல் இருக்காது; மிக விரைவாகப் பேனா நகர்ந்துகொண்டேயிருக்கும்.

கட்டுரைகள், புத்தகங்கள் எழுதுவதென்றால் சிலருக்கு நாட்கள் கணக்கில் திங்கள்க்ள் கணக்கில் ஆகும். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களுக்கு எல்லாம் மணிகள் கணக்கிலேயே முடிந்துவிடும். ஐந்துமணிநேரம், ஆறுமணிநேரம், எட்டு மணி நேரம் என்ற கால அளவிற்குள் ஒரேயடியாக உட்கார்ந்து கட்டுரைகளோ, நூல்களோ எழுதித் தள்ளிவிடுவார்கள். பெரும்பாலும் இரவு 11 மணி அல்லது 12 மணிக்கு எழுதத் தொடங்கிக் காலை 6 அல்லது 7 மணிவரையில், விடாமல், எழுத நினைக்கும் எல்லாவற்றையும் எழுதி முடித்துவிடுவார்கள். எழுதுவதைப்போலவே படிக்க எண்ணும் நூலை எடுத்து ஒருசில மணி நேரத்தில் படித்து முடித்துவிடுவார்கள். அரை குறையாகப் படிப்பதோ, விட்டுவிட்டுப் படிப்பதோ அறிஞர் அண்ணா அவர்களிடம் காணமுடியாத பண்பாகும்.

அறிஞர் அண்ணா அவர்களுக்கே உரித்தான அழகான—சீரிய—உயர்ந்த—எளிய—இனிய—பொருள் செறிந்த—நயம் சிறந்த—எதுகை மோனை நிறைந்த நடை, மிக்க எளிதான முறையில், மிக்க விரைவாகத், தொடர்ந்தாற்போல், துவளாமல், தொங்காமல் அறிஞர் அண்ணா அவர்களின் எழுதுகோலினின்றும் வெளிப்படுவது போன்று வேறு யாரிடத்திலும் அவ்வளவு அருமையாகக் காணமுடியாது!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15 - 10 - 55 சனிக்கிழமை

மொழிவழி மாநில அமைப்பு

வாணிப வேட்டை — இலாபவேட்டை— பதவி வேட்டை—ஆதிக்க வெறி ஆகியவற்றை மட்டுமே முக்கியமாகக் கொண்டிருந்த வெள்ளையர் ஆட்சி, இந்தியத் துணைக்கண்டத்தைக் கண்டகண்டபடியெல்லாம் பிரித்து வைத்து அடக்கி ஆண்டுவந்தது.

இற்றைக்காலத்தில், குறிப்பாக வெள்ளையர் ஆட்சி நீங்கியதற்குப் பிறகு, கண்டகண்டபடியெல்லாம் சிதறடிக்கப்பட்டுக்கிடந்த மாநில அமைப்புகள், மொழியடிப்படையில் சீர்திருத்தி அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தைப் பொதுவாக எல்லா அரசியல் கட்சிகளும் வற்புறுத்திவந்தன. நீண்டகாலமாகவே மொழிவழி மாநிலப் புது அமைப்பைக் காரசாரமாகவும், அழுத்தந்திருத்தமாகவும் வற்புறுத்திவந்தது காங்கிரசுக் கட்சியேயாகும். எந்தக் காங்கிரசின் தலைவர்கள் மொழிவழி மாநிலப் புது அமைப்பை உரத்தக் குரலில் ஓயாது எழுப்பிவந்தார்களோ அதே காங்கிரசின் ஒரு சில முக்கியத் தலைவர்கள் மொழிவழி மாநில அமைப்பை எதிர்த்தும், இழித்தும், பழித்தும் பேசச் சிலகாலமாகத் தலைப்பட்டிருப்பது வேடிக்கையாக இருந்துவருகிறது.

மொழிவழி மாநில அமைப்பை வற்புறுத்திவந்த முக்கிய காங்கிரசுத் தலைவர்கள், இந்தியாவின் ஒற்றுமைக்கு அந்த நிலைமை ஊறு பயக்குமோ என்று அச்சப்பட்டுக்கொண்டு தம் கருத்தை இப்பொழுது மாற்றிக்கொள்ளத் துணிந்திருக்கிறார்கள் என்றாலும், மொழிவழி மாநில அமைப்பில் ஆர்வங்கொண்டு எழுச்சி கொண்ட மக்கள் அவ்வளவு எளிதாகத் தங்கள் கருத்தை மாற்றிக்கொள்வதாக இல்லை. மக்களின் எழுச்சியை எதிர்த்து நிற்க முடியாததால், ஏதோ ஒரு தங்களுக்கொத்தவகையில் மொழிவழி மாநில அமைப்பை ஏற்படுத்தலாம் என்று இந்தியக் காங்கிரசு அரசினர் அதற்கென எசு. பாசில் அலி, எச். என். குன்சுரு, கே. எம். பணிக்கர் ஆகிய மூவரையுங் கொண்ட குழு ஒன்றை நியமித்து ஆராயச் செய்தனர். அந்தக் குழுவினர் இரண்டாண்டுக் காலத்திற்கு மேலாக ஆராய்ச்சி நடத்தி அண்மையில் அறிக்கை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கை அடித்தல்—சேர்த்தல்—திருத்தல் ஆகியவைகளுக்கு உட்பட்டு இந்திய அரசினரால் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

அறிக்கை முற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் அமைந்துவிடவில்லை. குற்றங்கள் குறைகள் நிறைந்தாகவே அமைந்திருக்கிறது. குற்றங்களைக் களையவும், குறைகளைப் போக்கவும் ஆன நடவடிக்கைகளில் ஈடுபட ஆங்காங்குள்ள ஆர்வங்கொண்ட மொழிவழி மாநிலப் பற்றுடையோர் எழுச்சியுற்றுக் கிளம்பிவிட்டனர். இனிக் கிளர்ச்சிகள் பல நடக்கக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் ஆங்காங்குத் தென்படுகின்றன.

மொழிவழி மாநிலப் பிரிவினை ஏற்படவேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு முற்றிலும் உடன்பாடான கொள்கையாகும். தமிழகம் — ஆந்திரம் — கேரளம் — (துளுவம் உள்ளிட்ட) கருநாடகம் ஆகிய நான்கும் மொழிவழிப் பிரிந்து, வடநாட்டுத் தொடர்பினின்றும் விடுபட்டு, இனவழி ஒன்றுபட்ட ஒரு திராவிடக் கூட்டாட்சி நாடாக இலங்கவேண்டும் என்பதை வற்புறுத்தி, அதற்கான நடவடிக்கைகளில் மிக்க அக்கரைக் காட்ட தி. மு. கழகம் முனைந்து நின்று பணியாற்றிவருகிறது. இந்த அடிப்படையில் நின்று பார்க்கும்போது, மொழிவழி மாநிலப் புது அமைப்புக்குழுவின் அறிக்கை சிலபலத் தவறுகளைக் கொண்டதாகவே தென்படுகிறது.

தமிழக மாநிலத்தில் சேர்க்கப்படவேண்டிய எல்லாத் தமிழ்ப் பகுதிகளையும் முறைப்படி அமைப்புக்குழு சேர்க்கவில்லை. திரு-கொச்சி அரசிலுள்ள ஒன்பது தமிழ்த்தாலுக்காக்களில் தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை ஆகிய ஐந்துத் தாலுக்காக்களை மட்டுமே தமிழகத்தில் சேர்க்கக் குழு முடிவு கூறியிருக்கிறது. நல்ல தோட்டப் பயிர்த்தொழில் வருமானம் கிடைக்கக்கூடிய பீருமேடு, தேவிகுளம் தாலுக்காக்களையும், நெற்பயிர் பெரிதும் விளையக்கூடிய

நெய்யாற்றங்கரையையும், கோவை மாவட்டத்தை ஒட்டிய சித்தூர் தாலுக்காவையும் குழு கேரள மாநிலத்தில் சேர்த்திருக்கிறது. இந்தச் செயலில் நீதி, நேர்மை, நாணயம், முறை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றங்கரை தாலுக்காக்களில் தமிழ்ப் பேசுவோர் பெரும்பான்மையராக இருந்தும், அவர்களெல்லாம் நிலையில்லாக் குடிகள் என்று காரணம் காட்டியும், கேரளத்துக்குப் பொருளாதாரவகையில் அவை பயன்படவேண்டும் என்ற பொருளாதாரக் காரணங்காட்டியும் அந்த மூன்று தாலுக்காக்களையும் கேரளத்தில் சேர்க்கக் குழு முடிவு எடுத்திருக்கிறது. வரலாற்றினைத் துருவிப் பார்த்தால், தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றங்கரைப் பகுதிகள் தமிழகத்தின் பகுதிகளாகவே இருந்துவருகின்றன என்பதையும், அவற்றில் வாழ்ந்துவரும் பழங்குடி மக்கள் தமிழையே தாய்மொழியாகப் பேசிவருகிறார்கள் என்பதையும் அறியலாம். மேலும் அண்மையில் நடந்த பொதுத் தேர்தல்களில் அந்தப் பகுதிகளில் தமிழர் தாம் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையும் அந்தப் பகுதிகள் தமிழகத்தோடு இணையவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாகும். நெய்யாற்றங்கரையைச் சேர்ந்த மிகச்சிறிய பகுதி வேண்டுமானால் கேரளத்தோடு சேரக்கூடியதாக இருக்கும் என்று சிலர் சொல்லுகிறார்கள். அந்தப் பகுதியை மட்டும் வேண்டுமானால் பிரித்துக் கேரளத்தோடு சேர்த்துவிடலாம் என்றாலும், ஏனைய தமிழ்ப்பகுதிகள் அத்துணையும் தமிழகத்தோடுதான் சேர்க்கப்படவேண்டும்.

சித்தூர் தாலுக்கா தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதியாக இருந்தபோதிலும், அது கேரளத்தில் உள்ள ஒரு திட்டாகும் என்று வாதிட்டு, அதனைக் கேரளத்தோடு சேர்க்கக் குழு முயலுகிறது. உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்தால் அது கோவை மாவட்டத்தோடு சேர்ந்து வாழும் பகுதியாக விளங்குவதைக் காணலாம். அதுவும் தமிழகத்தோடு சேர்க்கப்படவேண்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அமைப்புக்குழு ஆந்திராவில் நீதியற்ற முறையில் சேர்க்கப்பட்டிருக்கும் சித்தூர், திருத்தணி, புத்தூர் போன்ற தமிழ்ப்பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்க்காமல், ஆந்திரா-சென்னை அரசுகள் கூடிக்கலந்து செய்யும் முடிவுக்கு விட்டிருப்பது குழப்ப நிலையை மேலும் மேலும் வளர்க்கவே பயன்படுவதாக இருக்கும். பிற பிரித்துச் சேர்க்கப்படவேண்டிய பகுதிகளைப் பற்றியெல்லாம் கூறிடும் அமைப்புக்குழு ஏன் ஆந்திராத் தமிழ்ப்பகுதிகளையும் பிரித்துச் சேர்ப்பதற்கு அறிவுரை கூறியிருக்கக்கூடாது? குழு தன்னுடைய கடமையைத் தட்டிக்கழிக்கும் ஒரு செயலாகவே இது காணப்படுகிறது. எனவே ஆந்திராத் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்கும் கருத்து அறிக்கையில் உறுதியாக வற்புறுத்தப்படவேண்டும்.

புதிய தமிழ் மாநிலத்தை, அறிக்கை, சென்னை என்ற பெயரிலேயே அழைக்கிறது. ஏனைய பல மாநிலங்களை ஏற்ற வேறு பெயர்களால் அழைக்க முன்வந்திருப்பதைப் போன்று, தமிழ் மாநிலத்தைத் தமிழகம் அல்லது தமிழ்நாடு என்று அழைக்க முற்படுவதுதான் முறை. இந்தப் பெயர்மாற்றம் திண்ணமாகச் செய்யப்படவேண்டியதொன்றாகும்.

ஐதராபாத்தைத் தனி மாநிலமாகவே வைக்கலாம் என்றும், தேவையானால் 1961-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்குப் பின் மொழிவழிப் பிரிந்து அந்தந்த மொழி மாநிலங்களோடு அந்தந்த மொழிப் பகுதிகளைச் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் குழுவினர் கூறுகின்றனர். இது சரியான முடிவு ஆகாது. 1961-ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரித்துக் கொள்ளலாம் என்ற நிலையை இப்பொழுதே உருவாக்கலாமே! அதில் என்ன தவறு ஏற்பட்டுவிடும். ஐதராபாத் தெலுங்கு—கன்னடம்—மராட்டி ஆகிய மூன்று மொழிகள் தனித்தனிப் பேசப்படும் மூன்று மொழிப் பகுதிகளைக்கொண்டதாக இருந்துவருகிறது. அந்த மூன்று மொழிப் பகுதிகளையும் பிரித்து முறையே ஆந்திரம்—கருநாடகம்—மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களோடு சேர்க்கவேண்டியதுதான் முறையாகும்.

பெருங் கிளர்ச்சிக்குப் பிறகு கருநாடகத்தோடு முன்பு சேர்க்கப்பட்ட பெல்லாரியை, மீண்டும் பிரித்து ஆந்திரத்தோடு சேர்க்கக் குழு முயலுகிறது. இது மீண்டும் பெரும் பெரும் கிளர்ச்சிகளுக்கு வித்திடுவதாகும். இப்படிப்பட்ட தேவையற்ற ஒரு நிலைமையைத் தோற்றுவிக்கவேண்டியதில்லை.

இவைபோன்று இந்தியத் துணைக்கண்டத்தின் பிற மொழி மாநிலங்களைப் பொறுத்தும் குற்றங்களும் குறைபாடுகளும் அமைப்புக்

குழுவினரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரியவருகின்றது.

திராவிடப் பகுதிகள் பற்றி நாம் மிக்க அக்கறைகொள்வதால், சேர்ந்தாற்போல் தமிழ் வழங்கும் பகுதி தமிழகமாகவும், தெலுங்கு வழங்கும் பகுதி ஆந்திரமாகவும், கன்னடமும் துளுவும் வழங்கும் பகுதி கருநாடகமாகவும், மலையாளம் வழங்கும் பகுதி கேரளமாகவும் புது அமைப்பில் மாறவேண்டும் என்பதைத்தான் நாம் மிகமிக வலியுறுத்துகிறோம்.

மொழிவழிப் புது மாநில அமைப்பு என்ற கொள்கையில் இறங்கினின்று முடிவு எடுக்கும்போது, அந்தக் கொள்கைக்குத்தான் முதலிடமும் முக்கிய இடமும் கொடுக்கப்படவேண்டும். ஆனால் அமைப்புக் குழுவினர் தம் விருப்பு வெறுப்புக்கேற்றாற்போல், குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், குழுவில் ஆதிக்கம் செலுத்திய தோழர் கே. எம். பணிக்கர் தம் விருப்பு வெறுப்புக்கு ஏற்றாற்போல் முடிவுகள் செய்துள்ளார்கள். மொழிவழி மாநில அமைப்பு என்று ஏற்பட்டுவிட்ட பிறகு, அதனால் ஏற்படும் சிலபல தொல்லைகளை ஏற்கவேண்டித்தான் வரும். எப்படிப்பட்ட அமைப்பு ஏற்படுத்தினாலும் அந்தந்த அமைப்புக்கு என்று தனித்தனித் தொல்லைகள் இருக்கத்தான் செய்யும். மொழிவழி மாநில அமைப்பு மொழி அடிப்படையில் சிலபல கூடுதலான வசதிகளைச் செய்துதருவதாக இருக்கிறது. எனவேதான் எல்லோரும் மொழிவழி மாநில அமைப்பை விரும்பி நிற்கின்றனர். கேரளத்தின் பொருளாதார வசதிக்கு என்று நல்ல வருமானம் தரும் தேவிகுளம்—பீருமேடு தாலுக்காக்களையும், நெல் விளையும் நெய்யாற்றங்கரையையும் கேரளத்தோடு இணைக்க முயலுவது எதிர்த்தொழிக்கப்படவேண்டிய செயலாகும். மொழிவழி மாநிலம் என்று சொல்லிவிட்டுப் பொருளாதாரக் காரணங்களைக் கொண்டுவந்து முன்நிறுத்துவது எவ்வகையிலும் ஏற்கப்பட முடியாததொன்றாகும். கேரளம் மலையாள மொழி ஆட்சிப்பகுதியாக மாறும்போது, அதோடு இணைத்துவிடப்படும் தமிழ்ப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தாங்கொணாத் துயர்களை ஏற்கவேண்டி நேரிட்டுவிடும். அத்தகைய கொடுமையிலிருந்து அப்பகுதித் தமிழ் மக்களைக் காப்பாற்றவேண்டியது மிக முக்கியமாகும். அந்தப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைத்தால்தான் அந்த நோக்கம் நிறைவேறும். தோழர் கே. எம். பணிக்கருக்குப் பீருமேடு, தேவிகுளம் தாலுக்காக்களில் சொத்துக்கள் இருப்பதால், தன்னல நோக்கத்தோடு அவற்றைத் தம் சொந்த மாநிலமான கேரளத்தோடு சேர்த்துக்கொண்டார் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையானால், அப்படிப்பட்ட தன்னல நோக்கத்திற்குச் சிறிதும் இடம் அளிக்கக்கூடாது என்பதைத்தான் வற்புறுத்திக் கூறுகிறோம்.

மொழிவழி மாநிலப் புது அமைப்பை நாம் வரவேற்கிறோம்; ஆனால் நாம் மேற் சுட்டிக்காட்டியுள்ள திருத்தங்களோடு முறையோடு நிறைவேற்றப்படவேண்டும் என்று வற்புறுத்துகிறோம்! மொழிவழி மாநில அமைப்பு தனித் திராவிடநாட்டுக் கொள்கைக்கு உடன்பட்ட ஒன்றே ஒழிய, முரண்பட்ட ஒன்று அல்ல!

" கட்டுக்கோப்பு உடைந்து சிதறுண்ட ஒரு நாட்டின் கடைசிக் கோரச் சம்பவம் அதனுடைய அதிகாரம் அழிவதோ அல்லது சிறப்பு சிதைவதோ அல்ல! நாட்டின் பொதுநலத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் விடுதலை வாழ்வை யிழப்பதுகூட அல்ல! பகைவரின் புகைப்படலம் நாட்டில் படர்வதும் எதிரிகளால் துரத்தியடிக்கப்பட்ட மக்கள் சிதறி நாலா பக்கங்களிலும் அகதிகளாக அலறி ஓடுவதும், மாற்றார்கள் நாட்டைச் சூறையாடிச் சொந்தமாக்கிக் கொள்வதும் அலங்கோலக் காட்சிகளாகக் காணப்படலாம். இவ்வாறு நாடு இழப்பதுகூட பொருட்படுத்தக் கூடிய தொன்றல்ல—கடைசியான மிக்க வேதனையைக் கொடுக்கக் கூடிய கோரச் சம்பவம் செழுமை கொழிக்கும் ஒரு மொழி மெல்லமெல்ல மங்கி மங்கி மறைந்து மடிவதாகும்."

—பின்ன மாக்லியாட்.

அறிவுப் புதிர் 2 - விளக்கம்

(சென்ற இதழில் வெளியான அறிவுப்புதிர்களுக்குரிய விளக்கங்கள்)

புதிர்—1 : வியர்வை ஆவியாக மாறுவதற்கு அதிக வெப்பம் தேவைப்படுகிறது. அந்த வெப்பம் உடலிலிருந்தே பெறப்படுவதால் உடலின் வெப்பநிலை குறைந்துவிடுகின்றது.

புதிர்—2 : மூளை, இருதயம் இவைகளைப் போலவே சிறுநீர்ப் பையும் சிக்கலான அமைப்பைக்கொண்டு முக்கியமான சில வேலைகளைச் செய்கின்றது. இரத்தத்தை வடிகட்டிக் கழிவுப்பொருள்களை நீக்குகின்றது. உடலில் உண்டாகும் சில நச்சுப் பொருள்களின் தன்மைகளை அழிக்க உதவுகின்றது. உடலின் நீர் பொருள்களின் விளைவுகளைக் கட்டுப்படுத்துகின்றது. அதிக இரத்த அமுக்கத்திற்கும் சில சமயங்களில் சிறுநீர்ப்பையின் அமைப்பே காரணமாகின்றது. ஆகவே சிக்கலான அமைப்பைக்கொண்டிருக்கும் உடலின் உள்ளுறுப்புகளில் சிறுநீர்ப்பையும் முக்கியமானதாகும்.

புதிர்—3 : நமது உடலின் வெப்பநிலை எப்பொழுதுமே மாறுபடாமல் ஒரே சீராக இருக்காது. நாம் தூங்கும்போது நமது உடலின் வெப்பநிலை குறைகிறது. ஒவ்வொருவருடைய தூக்கத்தின்போதும் உடலின் வெப்பநிலை ஒன்றிலிருந்து இரண்டு டிகிரி வரைக்கும் குறைகின்றது.

புதிர்—4 : மூக்கிலும், தொண்டையிலும் உள்ளிழுக்கப்படும் காற்று உலர்த்தப்படுவதில்லை. மாறாக கொஞ்சம் சூடாகவும் ஈரமாகவும் ஆக்கப்பட்டு நுரையீரலுக்கு அனுப்பப்படுகிறது.

புதிர்—5 : நேராக அல்லாமல் பக்கங்களிலிருந்து வரும் சாய்வு ஒளிக்கதிர்கள் கண்ணில் புகுவதை, மூக்கு, புருவங்கள் கன்னத்தின் எலும்புகள் ஆகியவை தடுத்து நல்ல பார்வை ஏற்பட பெரிதும் உதவுகின்றன. மேலும் நெற்றியிலிருந்து வழியும் வியர்வைத்துளிகள் கண்ணில் இறங்கிவிடாமல் புருவங்கள் தடுத்து நிறுத்திக் கண் பார்வையைப் பாதுகாக்கின்றன.

புதிர்—6 : வேறுபட்ட தூரங்களிலுள்ள பொருள்களைப் பார்ப்பதற்குத் தருந்தாற்போல் கண் குவிவில்லை (Lens) யின் அளவு மாறுபடுகிறதேயல்லாமல் கண்பாவை (Pupil) யின் அளவு மாறுபடுவதில்லை. ஒளிக்கதிரின் தன்மைக்கேற்ப—ஒளி குறைய விரிந்தும், ஒளி மிக சுருங்கியும்—கண் பாவையின் அளவு மாறுபடுகின்றது.

புதிர்—7 : நுரையீரலிலுள்ள காற்றை ஒரு பெருமூச்சுவிடுவதனால் வெளியேற்ற முடியாது; கொஞ்சம் காற்று அங்கேயே தங்கிவிடும். உள்ளிழுக்கப்பட்ட குறிப்பிட்ட அளவு காற்றை வெளியேற்ற பல ஆழ்ந்த மூச்சுகளை விடவேண்டியிருக்கும். உள்ளிழுக்கும் காற்றில் கொஞ்சம் தங்கிவிடுவதனால்தான் சிகிரெட் முதலிய புகைப்பொருள்களை உபயோகிக்கும்பொழுது, அப்புகைக்காற்று நுரையீரல் சென்று கொஞ்சம் தங்கி அதன்மூலம் புகையிலை நஞ்சு (Nicotine) உடலில் சேர வழி ஏற்படுகின்றது.

அறிவுப் புதிர் - 3.

கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களில் சரியானவை எவை, தவறானவை எவை என்பதை அறிந்து தனித்தனியே குறியிட்டுக் கொள்ளவும். பின் உங்களது விடைகளை 35-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விடைகளோடும் விளக்கங்களோடும் சரிபார்த்துக் கொள்ளவும்.

1. உப்பு மிகுந்த உணவு வகைகளை அதிகம் உட்கொள்ளுவதால் நமக்கு அதிகம் நீர் வேட்கை ஏற்படும்.

சரி...... தவறு......

2. திகில்கொள்ளும்போது முகம் வெளுத்துவிடுவதற்கு, முகத்திலுள்ள உணர்ச்சி நரம்புகள் செயலற்றுவிடுவதே காரணமாகும்.

சரி...... தவறு......

3. உடலின் மற்ற பாகங்களைவிட முகத்திற்கு, குளிரையும் வெப்பத்தையும் தாங்கிக் கொள்ளும் திறன் இருப்பதனால்தான் நாம் முகத்தைவிட்டு மற்ற பாகங்களை அணிகள் கொண்டு பாதுகாத்துக்கொள்ளுகின்றோம்.

சரி...... தவறு......

4. ஒற்றைக் கண்ணால் பொருள்களைப் பார்ப்பதற்கும் இரு கண்களால் பொருள்களைப் பார்ப்பதற்கும் வேற்றுமை எதுவும் இல்லை.

சரி...... தவறு......

5. உடலின் அசைவுகளை ஒழுங்குபடுத்தி உடலைச் சம நிலையில் வைக்கவல்ல உணர்ச்சியைத் தூண்டும் உறுப்பு காதில் இருக்கிறது.

சரி...... தவறு......

6. அவசர அவசியமான சில சமயங்களில் உணர்ச்சி நரம்புகள் மூளையின் உத்தரவுகளைப் பெறுவதில்லை.

சரி...... தவறு......

7. முதுகெலும்பு உடலிலுள்ள எலும்புகளிலெல்லாம் அதிக நீளம்கொண்டது.

சரி...... தவறு......

சிலந்திக்கூடு

[இரா. செழியன்]

காட்சி 1.

[திவான்பகதூர் திருவேங்கடம் பிள்ளை வீடு. கணக்கப்பிள்ளை ஏழுமலை உட்கார்ந்து கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.]

ஏழுமலை : முக்கால்......ஒன்னேகாலே வீசம்...... ஒன்னே முக்காலே அரைக்கால்...... இரண்டு அரையே அரை வீசம்......அரை வீசம்......அரை வீசம்......(புத்தகத்தை மூடிவைத்துவிட்டு எழுந்து, கையை உதறிக்கொண்டு) சே! பொழுது விடிஞ்சு பொழுது போனு, இந்தக் கணக்குகளைப் பார்க்கிறதுக்குள், என் கணக்கு முடிஞ்சு விடும்போலிருக்கு! திவான்பகதூர் திருவேங்கடம் பிள்ளை வீட்டுக் கணக்கைப் பார்க்கிறதுன்னு சாமான்யமா? அதுவும் ஒரு கணக்கா, இரண்டு கணக்கா? பத்து கணக்குப் பார்க்கணும்; கடைக்கு ஒரு கணக்கு, வீட்டுக்கு ஒரு கணக்கு, பாங்குக்கு ஒரு கணக்கு, பங்காளிக்கு இன்னொரு கணக்கு முதலாளிக்கு இரகசியமா ஒரு கணக்கு, இன்கம் டாக்ஸ்காரனுக்கு எல்லாத்தையும் விட்டுப், புதிசா ஒரு கணக்கு! இந்த ஏழுமலையைத் தவிர, வேறு யாராயிருந்தாலும் எப்பவோ ரிசைன் பண்ணிட்டுப் போயிருப்பான்! (பொடியைப் போட்டுக் கொண்டு, கோட்பையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து) நாளைக்குக் கிண்டிரேசில் எந்தக்குதிரை வரும்...உம்!...அகமத்கானுக்கும் சங்கருக்கும் சரியான போட்டி! பிளாக் மாஜிக் போனதடவை டபிள் அடிச்சுது ஆனல் இந்தத்தடவை வெயிட் ஏத்திட்டான், அது எங்கே வரப்போவுது! தாஜ்மகாலைப் பார்க்கனும்...இது என்ன புதுக்குதிரையா யிருக்கு!

[திவான்பகதூர் திருவேங்கடம் பிள்ளை வந்து நாற்காலியில் உட்காருகிருர்.]

திவான் : ஏழுமலை! பகதூர்ஷா கணக்கு எப்படியிருக்கு?

ஏழு : (புத்தகத்தைப் புரட்டி) பகதூர்ஷாவை நம்பறதில் பிரயோசனமில்லை! கவர்னர் கப்பில் இரண்டாவது வந்ததற்கப்புறம் அந்தக் குதிரை தலை நீட்டவேயில்லை, ரொம்ப தண்டம்! அதுகுதிரையா? கழுதை! கழுதை!

திவான் : (எழுந்துவந்து) என்னடா உளருகிறே? நம்ம பாங்கியில் கடன் வாங்கின பகதூர்ஷாவைப் பற்றிக் கேட்டா, நீ என்னமோ குதிரை, கழுதைன்னு சொல்லுகிறே! என்ன புத்தகமது? (புத்தகத்தை வாங்கிப் பார்த்து) கிண்டி ரேசா? (ஏழுமலையை ஏற இறங்கப் பார்த்து) வீட்டுக்கணக்குப் பார்க்க ஆள் வைச்சா, நீ கிண்டிரேஸ் கணக்குப் பார்க்க ஆரம்பிச்சிட்டியா? நீயும் இவ்வளவு நாளா ரேசுக்குப் பணம்கட்றியே, என்னைக்காவது உனக்கு வந்துதா? சூதாட்டமே ரொம்பத் தப்பு! நியாயமான வழியில் சம்பாதிக்கனும்! தெரிஞ்சுதா?

[ஏழுமலை பேசாமல் நின்ருன்.]

திவான் : அந்தக் கணக்குப் புத்தகத்தை எடு! போனவருசத்துக்குக் கணக்கைச் சரி பார்த்து முடிச்சு வைச்சுட்டியா?

ஏழு : எந்தக் கணக்குங்க? பாங்குக் கணக்குங்களா, கிராமக் கணக்குங்களா?

திவான் : எல்லாக் கணக்கும் சேர்த்துதான்' என் தனிக்கணக்குந்தாண்டா?

ஏழு : அதுவா! ரொம்ப இரகசியமா வைத்திருக்கிறேன்! (புத்தகத்தை மறைவான இடத்திலிருந்து எடுத்துத் தருகிருன்.)

திவான் : ஆமாம்! புத்தகத்தைத் ரொம்ப இரகசியமா வைத்திருக்கிறே? இன்கம் டாக்ஸ்காரன் வந்தா, புத்தகத்திலிருக்கிறது, பாதி ரகசியம் அம்பலமாயிடுதே! (புத்தகத்தைப் பார்த்து) என்னடா இது?

கிராமத்திலிருந்து இரண்டாவது சோகக் கணக்கு ?

ஏழு : (பார்த்து) இல்லிங்க! இரண்டாவது போகக் கணக்கு என்று போடறதுக்கு, பானுவுக்குப் பதில் சானு போட்டுட்டேன்! எழுத்தில் ஏதாவது விட்டிருப்பேன்! கணக்கில் ஒன்னும் தவறிருக்காது!

திவான் : (கணக்கைப் பார்த்துவிட்டு) ஐயோ! நஷ்டம்! நஷ்டம்! கணக்கு முடிவில் நஷ்டமல்ல காண்பிக்குது! (உள்ளிருந்து சாரங்கன் நன்றாக உடையணிந்து வருகிறான்.)

சார : என்னப்பா! சத்தம்போட்டிங்க!

திவான் : ஆமாம்! நான் சத்தம்போட்டேன், இவன கேட்க வந்துட்டான்! பிள்ளென்னு நீயும், இருக்கே! இந்தக் கணக்கு வழக்கையெல்லாம் நீ பார்த்தா, இப்படி நஷ்டமெல்லாம் வருமா? உனக்குதான் ஊர் சுத்தவே நேரம் போதலியே?

ஏழு : (கணக்குப் புத்தகத்தை வாங்கிப் பார்த்து) எசமான் சரியாப் பார்க்கலே! இதோ! முடிஞ்ச வருசத்தில் ரூபாய் ஒரு லட்சத்து, இருபத்து மூவாயிரத்து ஐந்நூத்து எண்பத்தெட்டு, நாலணு லாபம் காண்பிக்குதே?

திவான் : மகா லாபத்தைக் கண்டுபிடிச்சிட்டான்! போன வருசம் எவ்வளவுடா லாபம்?

ஏழு : (வேறொரு புத்தகத்தை எடுத்துப் பார்த்து) ஒரு லட்சத்து எழுபத்தெட்டாயிரத்துச் சொச்சம்!

திவான் : போனவருசத்துலாபம் ஒருலட்சத்து எழுபத்தெட்டாயிரம்! என்னடாச்சுது, ஐம்பதாயிரம் நஷ்டம்தானே நமக்கு!

ஏழு : நஷ்டம்னு சொன்னதும் நானும் பயந்து போனேன்! திவான்பகதூர் எஸ்டேட்டில், அதுவும் ஏழுமலை கணக்குப்பார்த்து நஷ்டம் வந்துதுன்னு?

திவான் : இப்படியே லாபம் வரவரக் குறைந்துகொண்டே போனல், திவான்பகதூர் திவால்பகதூர் ஆகவேண்டியதுதான்!

[சாரங்கன் மெதுவாக நழுவப் பார்க்கிறான்.]

திவான் : சாரங்கா! எங்கடா போறே?

சார : கிளப்புக்குப் போறேன்!

திவான் : ஆமாம்! கிளப்புக்குன்னு சொல்லி மாதம் இருநூறு, முந்நூறு என்னு கணக்கில் போட்டிருக்கே! எனக்கு ஒன்னும் புரியலே! கிளப்பு, கிளப்புன்னு சொல்லி, ஏதாவது பிளாக்மார்க்கட் மணி சேர்க்கிறியா? அப்படி செஞ்சாலும் பரவாயில்லே.

சார : இல்லேயப்பா! கிளப்பில் டின்னர், டீ பார்ட்டி அப்படி, இப்படின்னு வருது, நான் கொடுக்கமாட்டேன்னு கண்டிப்பா சொல்லிடறது வழக்கம்! ஆனல் வருகிறவங்க, என்ன, திவான்பகதூர் பிள்ளை நீ கொடுக்காம வேறு யார் கொடுப்பா என்னு சொல்றுங்க! உங்க பேருக்குக் குறைவு வரப்படாதுன்னு நான் கொடுக்கிறேன்! நீங்க வேண்டாமுன்னு சொல்லுங்க, நான் கிளப்புக்கு போறதையே நிறுத்திவிடறேன்! எனக்கும் தொல்லையாத்தான் இருக்கிறது! ஆனல் கிளப்புக்குப் போனதும், வந்திருக்கிறவங்களெல்லாம், மந்திரி கலெக்டர் எல்லாம்—அதற்குக் குறைஞ்சவங்க எங்க கிளப்பில் மெம்பரே ஆகமுடியாது. அவர்களெல்லாம் "திவான்பகதூர் எப்படியிருக்கிருர்?" என்று என்னிடம் உங்களைப்பற்றி விசாரிக்காம இருக்கமாட்டாங்க!

திவான் : ஆ! அப்படியா? மந்திரிகளெல்லாம் என்னைப்பற்றி விசாரிக்கிருங்களா? அப்படின்னு உங்க கிளப்புக்கு நானும் வருகிறேன், எனக்கும் பொழுதுபோகலே! ஒரு பர்மிட் வாங்கனும், ஏதாவது முடியுதான்னு பார்க்கலாம்!

சார : அவசியம் நீங்கள் வரணும்! ஆனு நான் இன்றைக்கு ஒரு சிநேகிதன் வீட்டு விருந்துக்குப் போகிறேன். இன்னொரு நாளைக்கு நீங்கள் வரலாம்.

[சாரங்கன் போய்விடுகிருன்].

திவான் : சாரங்கன் சொன்னது உண்மையா? அல்லது என்னை திருப்திப்படுத்தச் சொல்லுகிருனு?

ஏழு : உண்மையாகத்தான் இருக்கும்! கடை வீதியில் நான் அடியெடுத்துவைத்தால் போதும், நம்மிடம் கடன் வாங்கினவனெல்லாம் எவ்வளவு அக்கரையுடன் விசாரிக்கிருர்கள் தெரியுமா?

திவான் : உயிரோட இருக்கானு இல்லையா என்று?

[ஏழுமலை 'ஆமாம்' என்று சொல்ல வாயெடுத்து மூடிக்கொள்ளுகிறான். சமையற்காரி செங்கமலம் வருகிறாள்.]

திவான் : செங்கமலம்! இவ்வளவு நாழியும் எங்கே போயிருந்தே?

செங் : லேடிஸ் கிளப்புக்கு!

திவான் : அடி சக்கைன்னா! சமையற்காரிக்கு சாயங்காலம் ஆனா லேடிஸ் கிளப்பு வேண்டியிருக்கா?

செங் : நீங்கதானே சின்ன அம்மா இருக்காங்களான்னு பார்த்துவிட்டு வரச்சொன்னீங்க?

திவான் : ஆமாம். மறந்துவிட்டேன்! அவள்—கோமளா—அங்கு இருந்தாளா?

செங் : அங்கு இல்லிங்க!

திவா : இல்லைன்னு வந்துட்டியே! வர்ற வழியில் சித்தி வீட்டில் இருக்காளான்னு பார்க்கக்கூடாதா! மத்தியானம் சாப்பிட்டுப் போனவ இன்னும் காணமே! மணி ஏழு ஆவுது!

செங் : சித்தி வீட்டிலேயும், பக்கத்து மாமா வீட்டிலேயும் பார்த்தேன் வரலைன்னு சொன்னாங்க!

திவான் : எங்கேடி அந்தக் கழுதை போயிருக்கும், எங்கேடி போயிட்டா?

செங் : தெரியலிங்க!

திவான் : உனக்கெங்கே அதுக்கெல்லாம் நேரமிருக்கு? பொண்ணு வெளியேபோனா, எங்கே போனாள், என்னா வேணுமின்னு கேட்கவேண்டாம்?

செங் : எங்கே போறீங்கன்னு கேட்டால், அபசகுனம்னு எறிஞ்சு விழுறாங்க!

திவான் : அவள் எறிஞ்சு விழுந்தா, இவள் அப்படியே சாம்பலாயிட்டா! போய் வேலையைப் பாரு! எங்கே அந்த நாயைக் காணோம்!

செங் : இப்போதான் வெளியே போனார்!

திவான் : நீ யாரை சொல்றே?

செங் : சின்ன ஐயாவைப் பற்றிதானே கேட்டீங்க?

திவான் : இங்கே படுத்துக்கிடந்த நாயைப் பற்றிக் கேட்டா, நீ சாரங்கனைப் பற்றிச் சொல்ல வந்துட்டியே! அவனைப் பார்த்து நாயுன்னு சொல்ல உனக்கு எவ்வளவு துணிச்சலிருக்கும்? உன்னை வேலைக்கு வைத்துக்கொண்டதே பிசகு!

செங் : இல்லைங்க, சித்த முந்தி கோமளா அம்மாவைப் பற்றி சொல்லும்பொழுது கழுதைன்னு சொன்னீங்க, அதுமாதிரி சின்ன எசமானையும் வேறு பெயராக...

(திவான்பகதூர் முறைத்துப் பார்க்க, அடங்கிவிடுகிறாள்.]

திவான் : புதிசா ஒரு டிரைவர் வந்திருக்கான்லே, அவனைக் கூப்பிடு!

செங் : வேலு அண்ணனையா?

திவான் : அவன் உன் அண்ணனா?

செங் : சொந்த அண்ணன் இல்லைங்க, என் பெரியம்மா மகன்!

திவான் : அதுதான் டிரைவர் வேலை காலியானதும், அவனைப் பிடித்துவந்து நிறுத்தினியோ? போய் அவனை வரச்சொல்லு!

(செங்கமலம் போகிறாள்.)

திவான் : ஏழுமலை? புது டிரைவருக்கு எவ்வளவு சம்பளம் போட்டிருக்கே?

ஏழு : நாற்பது ரூபாய்ங்க!

திவான் : முப்பத்தைந்து, அல்லது முப்பதாகக்கூட குறைத்துவிடலாம்! சமையற்காரியோட அண்ணன் முறையின்னா, அவனுடைய சாப்பாடு முழுவதும் இங்கிருந்துதான் போகும்!

[டிரைவர் வேலு வருகிறான்.]

திவா : என்ன, வேலைக்கு வந்ததும் வராததுமாத், தூங்கி வழியறே!

வேலு : இராத்திரி வந்து படுக்கும்பொழுது மணி மூணு, மறுபடியும் காலையில் ஐந்து மணிக்கெல்லாம் காரை எடுத்தேன். இப்போதாங்க சிறிது படுத்தேன்.

திவான் : சரிதான், வேலைன்னா கவனமாச் செய்யணும்! காரை எடு!

வேலு : எங்கே போகணும்?

திவான் : கிளம்புகிறபொழுதே, அபசகுனம் பிடிச்சாப்போல, கேட்கிறே! காரை எடுன்னா, எடுக்கவேண்டியதுதானே, போறேன் நான் எங்கேயாவது, சுடுகாட்டுக்கு?

வேலு : சரிங்க!

திவான் : என்னடா சரிங்க!

வேலு : ஆறு, பத்து மணிக்கு சின்ன எசமான் கார் கொண்டுவரச்சொல்லியிருக்காங்க!

திவான் : மணி எட்டுதானே ஆவுது? நான் போய் இறங்கிக்கொண்டு, அப்புறம் அனுப்புகிறேன்! போ! (வேலு போகிருன்.)

திவான் : ஏழுமலே! சோமலிங்கம்பிள்ளைக் கணக்கைப் பாரும்! ஆளுக்குத் திடீரென்று டேஞ்சராம்! மயக்கம்போட்டு, படுக்கையிலிருக்கிருரென்று ஆள் வந்து சொல்லிவிட்டுப் போனுன்!

ஏழு : (கணக்கைப் பார்த்து) நாம்தாங்க அவருக்கு ஒருலட்சம் கொடுக்கனும்!

திவான் : ஒருலட்சமா? எதற்காக வாங்கினேம்?

ஏழு : போனவருசம் நஷ்டக்கணக்கு ஒரு லட்சம் காட்டினேம். அதற்கு ஒருலட்சம் அவரிடமிருந்து வாங்கிப் போட்டோம்!

திவான் : நாம்தானே அவருக்குக் கொடுக்க வேண்டும், அப்போ, பாதகமில்லே.

[செங்கமலம் வருகிருள்.]

செங் : கோமளம்மா இன்னும் வரவில்லிங்க!

திவான் : எங்கே போயிருக்கப் போகிருள்? எல்லாம் வந்துவிடுவா? அவள் சிநேகிதி ஜானகி வீட்டிற்குப் போயிருந்தாலும் இருக்கலாம்! நான் பார்த்துவிட்டு வருகிறேன்!

[போகிருர்.]

ஏழு : (எழுந்து, செங்கமலத்தின் பக்கத்தில் வந்து நின்று) செங்கமலம்! செங்கமலம்!

செங் : என்ன? செங்கமலத்துக்கு என்னவாம்? ஏனய்யா இப்படி முழிக்கிறே திருதிருன்னு?

ஏழு : இப்போ உனக்கு வேலே அதிகமா? கொஞ்சம் இப்படி உட்காரேன்!

செங் : சரி, சரி! எசமான் வந்தவுடன் எல்லாத்தையும் சொல்லிடறேன்!

ஏழு : எதை?

செங் : அவரில்லாத சமயத்தில், என்னைப் பார்த்து, நீ கண்ணைச் சுத்தறதும், கை நீட்டிப் பேசறதும்!

ஏழு : ஐயாகிட்ட சொன்ன அவர் நம்பமாட்டாரு!

செங் : சின்ன அம்மாகிட்ட சொல்லிடுவேன்!

ஏழு : கோமளா அம்மாவா? அவங்க இந்த நேரத்தில், யாருகிட்ட கண்ணைச் சுற்றி, கைகோர்த்துப் பேசிக்கொண்டிருக்காங்களோ!

செங் : படுபாவி! அம்மாவைப்பத்தி இல்லாததும், பொல்லாததும் சொல்லாதே!

ஏழு : திவான்பகதூர் வீட்டுப் பிள்ளையும் பெண்ணும் செய்கிற அட்டகாசங்களைச் சொல்லி ஊர் சிரிக்குது, அப்பப்பா! நமக்கு ஏன் இந்தப் பேச்சு?

காட்சி 2.

[ஒரு வீதி. சாரங்கன் தள்ளாடிக்கொண்டு நடந்து வருகிருன். எதிரே வரும் ஒருவர்மீது மோதிக்கொள்ளுகிருன்.]

சார : (தள்ளாடிக்கொண்டு) ஏனய்யா! ரோடு இவ்வளவு விசாலமாயிருக்கே, ஒதுங்கிப் போகாம என்மேலே வந்து விழுறியே? ஏன் இப்படித் தள்ளாடித் தள்ளாடி நடந்து போறே, நேராப் போகக்கூடாது? ஏப்பா, குடிச்சுட்டு வர்றியோ?

ஒரு : நல்லாயிருக்குது! இவன் குடிச்சுட்டுப் போதையிலே என்மேலே வந்து விழுந்ததில்லாமல், என்னைக் குடிகாரன்னு வேறே சொல்லுகிருன்! பாவம்! அவன் அப்பா திவான்பகதூர் திருவேங்கடம் பிள்ளை ரொம்ப அந்தஸ்தா வாழ்கிறவர், பையன் இங்கே ரோடை அளவெடுக்கிருன்.

[போகிருன்.]

சாரங் : வெய்யல் ரொம்பக் கடுமையா இருக்குது! சூரியன் என் தலேக்குமேல் இருக்குது! அதோ இன்னெரு சூரியன், இன்னென்று! எவ்வளவு சூரியன் இன்னைக்கு எரிக்குது, அதுதான் ரொம்பத் தண்ணித்தாகமாக இருக்குது.

[பையிலிருந்து ஒரு பாட்டிலே எடுக்கிருன்.
வேலு வருகிருன்.]

வேலு : எசமான்!

சார : உம்!

வேலு : உங்களைப் போய்த் தேடிப்பார்த்

தேன், எல்லாவிடத்திலும் காணும், கடைசியாக இங்கே சுற்றிக்கொண்டு இருக்கிறீங்க!

சார : இந்தப் பட்டப்பகலில் நான் எங்கேடா காணுமற்போயிடுவேன்.

வேலு : பட்டப்பகலா? ராத்திரி மணி பதினென்று ஆகுது!

சார : இது ராத்திரியா? ஏண்டா, உன் கண் பொட்டையா? அதோ! பார் சூரியன் எப்படிப் பிரகாசிக்கிருன்னு?

வேலு : அது சூரியன் இல்லிங்க, கார்ப்பரேஷன் லைட்! வாங்க வீட்டுக்குப் போகலாம்!

சார : அங்கே எதுக்கடா, இங்கேயே இருக்கலாம்!

வேலு : இல்லே, சாமி! ஐயாவுக்குத் தெரிந்தா கோவிச்சுக்குவாரு!

சார : ஐயாவுக்கு நீ பயப்படனும், எனக்கென்னடா! டேய்! உனக்கு எவ்வளவு தடவை சொல்றது, குஷியாயிருக்கும் பொழுது வந்து தொந்தரவு செய்யாதேன்னு! (தள்ளாடிக்கொண்டு விழப் போகிருன். வேலு அவனைத் தாங்கி, அழைத்துச் செல்லுகிருன்.)

காட்சி 3.

[திருவேங்கடம் பிள்ளை வீட்டுத் தோட்டம், சாரங்கன் பாடிக்கொண்டு வருகிருன், அவனைப் பிடித்துக் கொண்டு வேலு வருகிருன்.]

வேலு : ரொம்ப சத்தம் போடாதீங்க! ஐயா முழுச்சிக்கப் போருரு!

சார : ஏன்டா, நான் சத்தமா போடரேன், இது பாட்டுடா பாட்டு!

வேலு : அதுதாங்க வேண்டாங்கிறேன்.

சார : ஏண்டா, உனக்குச் சங்கீத ரசனையே கொஞ்சமும் கிடையாதா? ஏதாவது ஒரு சங்கீத சபையில் மெம்பரா சேர்ந்துக் கோடா! அப்புறம் சங்கீதம் வந்துவிடும். என்னடா நான் யோசனை சொல்லுகிறேன், நீ பேசாம நிற்கிறே!

வேலு : நீங்க சொல்றபடியே செய்யறேன்!

[சாரங்கன் தள்ளாடித் தள்ளாடி நடக்கிருன். வேலு அவனைப் பிடித்துக்கொண்டு வருகிருன்.]

சார : என்னை விடுடா! நீ தள்ளாடித் தள்ளாடி நடந்து என்னைக் கீழே தள்ளிவிடுவே போலிருக்கே!

[தோட்டத்தில் இருக்கும் பெஞ்சியில், சாரங்கன் உட்காருகிருன்.]

சார : வேலு!

வேலு : ஏங்க?

சார : என்னடா வேணும்?

வேலு : நீங்கதானே கூப்பிட்டிங்க!

சார : நானு கூப்பிட்டேன், (சிரித்துக் கொண்டு), ஏண்டா, இப்படிப் பொய் சொல்லுகிறே! இங்கே உட்காருடா!

வேலு : வேண்டாங்க!

சார : ஏண்டா, வேண்டாம்?

வேலு : நான் டிரைவர், உங்களுக்குச் சம்மா உட்காரலாமா?

சார : டிரைவரா? என் டிரைவர்தானே?

வேலு : ஆமாம்!

சார : அப்போ நான் சொல்றபடிதானே நீ நடக்கனும்!

வேலு : ஆமாங்க!

சார : நான் உட்காருன்னு சொல்கிறேன், உட்காருடா! (வேலுவை இழுத்துப் பக்கத்தில் உட்காரவைத்து) ஒன்னு வேணும்!

வேலு : என்னங்க!

சார : ஒன்னும் வேண்டாம்! ஒரு ஆயிரம் ரூபாய் இருந்தா போதும்! என்னடா போதுமா, போதாதா?

வேலு : போதுங்க!

சார : ஆயிரம் ரூபாயின்னு எவ்வளவு தெரியுமா? பத்து நூறு ரூபாய்! இந்த பாருடா! ஒன்னு, இரண்டு, மூன்று, நாலு ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது (வலது கை கட்டை விரலால் எண்ணுகிருன்) ஐயையோ!

வேலு : என்னங்க?

சார : என் இரண்டு கையிலும் ஒன்பது விரல் தான் இருக்குது, ஒரு விரலைக் காணோம்!

வேலு : எல்லாம் சரியா இருக்குதுங்க! நான் எண்ணிக் காண்பிக்கிறேன். (சாரங்கனின் கையைப் பிடிக்கிருன்.)

சார : உனக்குக் கணக்கு ரொம்பத் தெரியுமோ? நானே மறுபடியும் எண்றேன். ஒன்னு, இரண்டு, மூனு,...(வேலுவின் விரல்களையும் சேர்த்து) பதினுலு! பாத்தியா, முதலில் தப்பா எண்ணிட்டேன்! இப்போ, பதினுலு விரல் இருக்குது? ஆமா, பத்துவிரல்தானே இருக்கனும்! ஒன்னும் புரியலையே? (கைவிரல்களைப் பார்த்து) டேய்! அதோ பாருடா சந்திரன் எவ்வளவு அழகாகப் பிரகாசிக்கிருன்னு.

வேலு : சந்திரனு? நேத்துதானே அமாவாசை இன்னைக்கு எப்படிங்க சந்திரன் இருக்கும்?

சார : பின்னே நான் பொய்யாச் சொல்றேன்! அதோ! பாருடா, நல்லா ரௌண்டா சந்திரன் இருக்குது!

வேலு : அது நம்ம தோட்டத்துக் குளோப் லைட்டுங்க! சந்திரனில்லே!

சார : ஏண்டா, நான் எது சொன்னுலும், மறுத்துச் சொல்றே! குளோப் லைட்டுக்கும், சந்திரனுக்கும் எனக்கு வித்தியாசம் தெரியாதா? இருடா, பக்கத்தில் போய் காட்டுகிறேன்!

[எழுகிருன். அவன் பையிலிருந்து ஒரு பாட்டில் செடி மறைவில் விழுகிறது.]

சார : என்னடா, அது?

வேலு : ஒரு பாட்டில் விழுந்து உடைஞ்சுட்டுதுங்க!

சார : உடைஞ்சுட்டுதுன்னு, சொல்றியே! சீக்கிரம் குடிச்சடரு?

வேலு : வேண்டாம், எசமான்!

சார : மகா யோக்கியன்! சொல்றபடி செய்டான்னு! சீக்கிரம்! கீழே போய்விடப் போவுது? (வேலுவைப் பிடித்துச் செடி மறைவில் அழுத்துகிருன்.)

சார : வேலு! டேய், வேலு! ஆளைக் காணுமே! எங்கே போயிட்டான்?

[வேலு பாடிக்கொண்டு செடி மறைவிலிருந்து வெளி வருகிருன்.]

சார : என்னடா, சத்தம் போடறே?

வேலு : சத்தமா? பாட்டு சாமி, பாட்டு! (கையால் துழவி) நீங்க எங்கே இருக்கீங்க!

சார : நீ எங்கேடா இருக்கே!

வேலு : அதுதாங்க தெரியலே!

சார : (அவனைப் பிடித்து உட்காரவைத்து) டேய்! இப்போ அந்த சந்திரன் இருக்கிறது தெரியுதா?

வேலு : ஓ!

சார : சித்தமுந்தி ஒன்னுமில்லேன்னு சொன்னியே பொய்தானே சொன்னே?

வேலு : நீங்க சொல்றதுகூடப் பொய் தானுங்க!

சார : ஏண்டா?

வேலு : ஒரு சந்திரன் இல்லிங்க, இரண்டு சந்திரன் இருக்குதுங்க!

சார : பார்த்தியாடா, உன் புத்தி இப்போ எப்படி விசாலமாயிட்டுதுன்னு?

வேலு : சந்திரமண்டலம் வரைக்கும் போயிருக்கு, எசமான்!

சார : டேய்! இப்போ எசமான்னு சொல்லாதே, நம்ம இரண்டு பேரும் பிரதர் மாதிரி! ஆமாம், பிரதர்!

வேலு : சரிங்க! பிரதர், என்ன இது, இங்கே இருக்கிற மரம், வீடு எல்லாம் என்னைச் சுற்றிச் சுற்றி வருகுது? உலகமே என்னை சுற்றி வருகிருப் போல இருக்குதே!

சார : பார்த்தியா, ஒரு பாட்டில் செய்கிற வேலையை! ஒவ்வொருத்தனும் பத்தாயிரம், இருபதினுயிரம் என்று செலவு செய்து உலகைச் சுற்றிப் பார்த்து வருகிருன்! இங்கே உலகம் நம்மைச் சுற்றி வருகுது! டேய்! தப்புத்தப்பு, பிரதர்! மணி என்னுயிருக்கும்?

வேலு : தெரியலிங்களே! என்ன, (விரல்களை மடக்கி) ஒரு மூனு இருக்கும்!

சார : தப்பு, மணி பார்க்கவே தெரியலே! (தன் கைக்கடிகாரத்தைக் கழற்றி) இதோ பார்! மணி ஆறுதான்! (வேலுவின் சட்டைப்பைக்குள் கடிகாரத்தைப் போடுகிருன்) பத்திரமா இருக்கட்டும்!

வேலு : நான் பார்த்துக்கிறேன்!

சார : நீ தொலைச்சுடுவே, நானே வைத்துக்

ஓமியோபதி

[டாக்டர் M. S. கனகசபை H. M. P., M. D. (Home & Bio)]

இன்று நம் தமிழகத்தில் ஆயுர்வேதம் என்னும் வடநாட்டு மருத்துவ முறையும், சித்தம் என்னும் தென்னாட்டு மருத்துவமுறையும், யூனானி என்னும் முகமதிய மருத்துவ முறையும், அல்லோபதி என்னும் ஆங்கில மருத்துவ முறையும், ஓமியோபதி என்னும் செர்மனி மருத்துவ முறையும் வழக்கத்தில் இருந்துவருகின்றன. இவற்றில் ஓமியோபதி என்னும் மருத்துவ முறையைப் பற்றிச் சற்று ஆராய்வதே கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

அல்லோபதி மருத்துவ முறையிலிருந்து தோன்றியதுதான் ஓமியோபதி மருத்துவ முறையாகும். இம்முறையைக் கண்டுபிடித்தவர் டாக்டர் சாமுவல் ஆனிமென் என்பவர் ஆவார். அவர் எர்லாஞ்சன் பல்கலைக்கழகத்தில் 'மருத்துவ மேன்மையாளர்' (M. D.) பட்டம் பெற்றுத், தொழில் நடத்திவந்தார். அவர் தொழில் நடத்திவரும்போது தாம் கையாண்ட மருத்துவ முறையில் பல தீமைகள் இருக்கக் கண்டார். தாம் மக்களுக்குப் பெருந்தீங்கு விளைவித்துவிடுவோமோ என்ற அச்சத்தால் அம்முறையைக் கைவிட்டார். அவர் தாம் கண்டறிந்த தீமைகளைக் குறித்து எழுதியுள்ளார். அவை வருமாறு:

நோயாளிகளின் பல குறிகளில் ஏதாவது ஒரு குறியை எடுத்துக்கொண்டு பழைய காலத்திலிருந்து அனுபவத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மருந்தைக் கொடுக்கிறார்கள். இந்த மருந்து எந்த நோயைத் தீர்க்க வேண்டுமோ அல்லது குறைக்கவேண்டுமோ அதற்கு நேர் எதிர் மாறான குறிகளை உண்டாக்குகிறது. எடுத்துக்காட்டாகத் தலைவலியின்போது வலியை நமக்கு உணர்த்தும் நரம்புகளின் சக்தியைத் தலையில் அடித்து, அவைகள் தம் சக்தியை இழக்கும்படி செய்யப்படுகின்றது; அதனால் நாம் தலைவலியை உணராமல் இருக்கிறோம்.

கொள்கிறேன். (தள்ளாடி வந்து வேலுவின் சட்டைப்பையைப் பிடித்து, அதிலிருந்த பேனாவை எடுத்துக்கொள்ளுகிறான்) என்னா இது, கடிகாரம் அதுக்குள்ள இப்படி நீண்டு போச்சுது!

வேலு : ஓட ஆரம்பிச்சிருக்கும்!

சார : (கொட்டாவி விட்டு) பிரதர்! எனக்குத் தூக்கம் வருகுது, போறேன். குட்நைட்!

[சாரங்கன் போகிறான். வேலு தள்ளாடிக்கொண்டு நடக்கிறான்.]

சார : (திரும்ப வந்து) டேய் வேலு! தேடித் தேடிப் பார்க்கிறேன், நம்ம வீட்டுக் கதவைக் காணும்டா!

வேலு : திருட்டுப்பயல்கள் யாராவது தூக்கிக் கொண்டு போயிருப்பானுக! காலையில் கண்டுபிடித்துவிடலாம்! நீங்க போய்ப் படுத்துக்குங்க!

சார : இப்போ வீட்டுக்குள்ளே போகனுமே! (தட்டித்தடவி, ஜன்னலின் கீழே நின்று) இந்தா இருக்குடா! வேடிக்கையாயிருக்கே! வாசல் படிக்கட்டு இப்படி உயரத்தில் போய்விட்டதே!

வேலு : நம்ம குடும்பம் கொஞ்சம் உசந்த குடும்பமில்லையா! அதால் படிக்கட்டும் உசந்துகொண்டே போவுது.

சார : கொஞ்சம் என்னைத் தூக்கிவிடடா, படி ஏறி வீட்டுக்குள் போய்விடுகிறேன்.

வேலு : நானிருக்கிறவரை நீங்க பயப்படவே வேண்டாம், பிரதர் மாதிரி பார்த்துக் கொள்றேன்.

சார : பிரதர், கொஞ்சம் குனிஞ்சுக்குங்க!

[வேலு தூக்கிவிட சாரங்கன் ஜன்னல் வழியாக உள்ளே போகிறான்.

சாரங்கன் உள்ளேயிருந்து, "குட்நைட் பிரதர்!" என்கிறான். வேலு பாடிக்கொண்டு போகிறான்.]

(தொடரும்)

“அபின், வயிற்றுப் போக்குக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த அபின் சிறு குடல் பெருங்குடல்களின் மேனோக்கித் தள்ளும் (உடலுக்கு வேண்டாதனவற்றை வெளித்தள்ளும்) சக்தியைத் தடுத்துவிடுகிறது. சிறுகுடலும் பெருங்குடலும் சிறுசிறு பகுதிகளால் ஆனவை. உடலுக்கு வேண்டாத மலம் முதலியன முதல் பகுதியில் வந்தவுடன, அது பெருத்துப் பின் சுருங்குவதால், அவை அதன் அடுத்த பகுதிக்குத் தள்ளப்படுகின்றன. இவ்விதம் ஒவ்வொரு பகுதியும் பெருத்துச் சுருங்குவதால், மலம் முதலியன மேல் தள்ளப்பட்டுப் பின் வராமல் தடுக்கப்படுகின்றன. இவ்விதம் மேலும் மேலும் தள்ளும் செயலை (Peristaltic Action) என்று சொல்லுவார்கள். இந்த இயற்கைச் செயல் அபினால் தற்காலிகமாக (சிறுகுடல் பெருங்குடல்கள் வேலை செய்யாமல்) தடை செய்யப்படுவதால் வயிற்றுப் போக்கு நின்றுவிடுகிறது. அதேபோல் தூக்கமின்மைக்கும் இந்த அபினையே கொடுக்கிறார்கள். அபின், இயற்கையாக ஏற்படும் அமைதியான தூக்கம் போன்றதொரு தூக்கத்தை அளிக்காமல், வலுக்கட்டாயமான முறையில் ஒரு மயக்க நிலையைத்தான் நோயாளிக்குத் தருகிறது. அதுபோலவே மலச்சிக்கலுக்கு மலமிளக்கி மருந்துகளைக் கொடுக்கிறார்கள். தீயால் சுட்ட கையைக் குளிர்ந்த நீரில் வைக்கிறார்கள். இது தற்சமயத்திற்கு எரிச்சலை மாற்றுகிறது. மிகுந்த நாட்பட்ட பலவீனத்திற்குச் சாராயத்தைக் கொடுக்கிறார்கள். அதனால் சிறிது நேரத்திற்குப் பலமுண்டானாற் போலத் தோன்றுகிறது. ஆனால் சாராயத்தால் மூச்சுப் பைகள் பாதிக்கப்படுகின்றன. கீல்வாதப்பிடிப்பு நோய்க்கு ‘சாலிசிலேட்’ என்னும் மருந்தைக் கொடுக்கிறார்கள். ஆனால் இது கீல்வாயுவை நிவர்த்தி செய்து இருதய நோயை உண்டாக்குகிறது. காக்கை வலிப்பிற்குப் ‘பிரைமைடு’ அல்லது ‘லுமினால்’ என்னும் மருந்தைக் கொடுக்கிறார்கள். இது காக்கை வலிப்பை நீக்கினாலும், இம்மருந்தால் நிவர்த்திக்கவே முடியாத பைத்தியம் ஏற்படுகிறது. இதேபோன்று பலமுறைகளைக் கையாளுகிறார்கள்.

“ஒவ்வொரு நோக்காட்டிலும் சிலமணி நேரத்திற்குள் நோயாளிகள் பழைய நிலையையோ அல்லது இன்னும் கடுமையான நிலையையோ அடைந்துவிடுகிறார்கள். இவ்விதமாகக் கொடுக்கப்படும் மருந்தினால் ஒவ்வொரு தூண்டப்பட்ட உறுப்பும் நோயை நீக்க வேலைசெய்து அவற்றின் வலிவை இழந்துவிடுகின்றன. ஒவ்வொரு உறுப்பும் இயற்கைக்கு மாறுபாடாகத் தமக்கு இடப்பட்ட வேலையை மிகவாகச் செய்து நாளடைவில் தாம் செய்யும் இயற்கையான வேலையைக் கூட செய்யமுடியாமற் போய்விடுகின்றன. பின் நோயாளியின் முடிவிற்குக் காரணம் சொல்லவேண்டுவதில்லை. நோயின் குறிகள் தலைகாட்டும்பொழுது ஒவ்வொரு அல்லோபதி மருத்துவமும் எதிர்முறையால் மருந்தை மிகவாகக் கொடுத்து நோயை மறந்துபோகும்படிச் செய்கிறார்கள். எதிர்முறை மருந்தால் நோய் சிறிதுகாலம் தடைப்படுவதுபோல் அமுங்கியிருந்து பின் மீண்டும் தோன்றுகிறது. இவ்விதம் நோய் முற்றிக்கொண்டே சென்று, நோயாளிக்கு இறப்பையோ அல்லது இறுதிவரையில் போக்கமுடியாத நோயையோ உண்டாக்கிவிடுகிறது. இந்த மருத்துவ முறையால் உண்டாகும் கேடுகளை ஆராய்ந்து பார்த்தால், நாம் நோயைப் போக்க வேறுமுறையைக் கையாளவேண்டி வருகிறது. நாம் கொடுக்கும் மருந்து நோயைக் குணமாக்காவிட்டாலும், வேறு ஒரு நோயை உண்டாக்காமலாவது இருக்கவேண்டும். நாம் கொடுக்கும் மருந்து நோயை நிலையாகப் போக்கக்கூடியதாகவும், இயற்கைக்கு மாறுபடாததாகவும், மிருதுவானதாகவும் இருக்கவேண்டும். நோயாளிக்கு மேலும் துன்பத்தை விளைவிக்க விரும்பவில்லையாதலால், நான் அல்லோபதி முறையைக் கைவிட்டு இலக்கிய இரசாயன சாத்திரத்தை மட்டும் ஆராய்ந்துவந்தேன்.”

டாக்டர் சாமுவல் ஆனிமென் இப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வந்தபின் பிழைப்பிற்காக மொழிபெயர்த்தல் என்னும் துறையில் ஈடுபடவேண்டியதாயிற்று. அவர் இருபத்திநான்கு வயதிலேயே 11 மொழிகள் அறிந்த கல்விமானாக விளங்கினார். அவர் மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபட்டிருக்கும்போது டாக்டர் வில்லியம் கல்லன் என்பவரால் எழுதப்பட்ட ‘ஔடத குண பாடம்’ என்னும் நூலை மொழிபெயர்க்கவேண்டி வந்தது. அதில் சிங்கோனா மரப்பட்டையைப்பற்றி எழுதியிருந்த செய்திகள் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை.

இந்த மரப்பட்டை குளிர்முறைக் காய்ச்சலுக்கு ஏற்றதாகக் கருதப்பட்டது. ஆனால் எவ்விதம் காய்ச்சலை மட்டுப்படுத்தும் என்ற விவரம் இல்லை. அது குறித்து அக்காலத்து மருத்துவர்களிடையே இருந்துவந்த கருத்துக்களையோ, ஆதாரங்களையோ அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அக்காலத்திலும் சரி இக்காலத்திலும் சரி ஒரு ஔடதத்தைப் பரிசோ

தனை செய்ய நோயாளிகளையே தேர்ந்தெடுத்துக்கொண்டு அவர்களிடம் பரிசோதித்துப் பார்க்கிறார்கள். இது மிகத் தவறு. ஏனெனில் நோயாளிகளுக்கு அம்மருந்தைத் தனித் தனியே கொடுத்தாலும் மருந்துகளின் குணங்கள் முழுவதையும் தெரிந்துகொள்ள முடியாது, ஏனென்றால் நோயாளியின் நோயின் குறிகளோடு மருந்தின் குறிகளும் சேர்ந்துவிடுகின்றன. ஆதலால் ஒவ்வொரு மருந்தின் சக்தியையும் அறிந்துகொள்ள நோயற்றவர்களையே தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். அவர்களுக்குக் கொடுத்து அதனால் அவர்களுக்கு ஏற்படும் உடல்நிலை மாறுபாட்டால் மருந்தின் சக்தியை அறிந்துகொள்வதே முறை. இது இயற்கைக்கும் ஒத்ததாகும். இந்த எண்ணத்துடன் டாக்டர் ஆனிமென் சிங்கோனா பட்டையின் திராவகத்தை வேளை ஒன்றுக்கு ½ அவுன்சு வீதம் நாள்தோறும் இரண்டு வேளைகள் தாமே உட்கொண்டார். நல்ல உடலமைப்போடு இருந்த அவருக்கு குளிர்முறைக் காய்ச்சல் ஏற்பட்டது. மருந்து சாப்பிடுவதை நிறுத்தினால் காய்ச்சலும் நின்றுவிடுகிறது. மீண்டும் சாப்பிட்டால் காய்ச்சல் வருகிறது. நிறுத்தினால் மீண்டும் நின்றுவிடுகிறது. இதைத் தம் உடலில் மட்டும் பரிசோதித்துப் பார்த்ததோடு அவர் நின்றுவிடவில்லை. தம் நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் உட்கொள்ளச் செய்தார். அனைவர்க்கும் குளிர் முறைக்காய்ச்சல் ஏற்பட்டது. ஆகவே இதிலிருந்து அவருக்கு ஓர் உண்மைவெளிப்பட்டது. அதாவது ஒரு மருந்து ஒரு நோயை நிவர்த்திக்குமா என்று கண்டுகொள்ள, அதனை ஏராளமான நல்ல உடல்நலமுடையார்க்குக் கொடுத்து, அவர்களிடத்தில் அது என்னென்ன நோய்க்குறிகளை உண்டாக்குகிறது என்பதைக் கண்டறிந்துகொள்ள வேண்டும் என்பதாகும். அம்மருந்தை உட்கொள்ளாமல் அம்மருந்தின் குறிகளை ஒத்த நோய்க்குறியை உடைய நோயாளிகளுக்கு அம்மருந்தைச் சிறிய அளவில் கொடுத்தால் (வீரியப்படுத்தி) அந்நோயை அறவே நீக்கும்.

இன்று உலகிலே அணுசக்தியைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன. இந்த அணுசக்தி பல வழிகளிலும் பயன்படுத்தப் படுகிறது. ஆனால் ஆனிமென் அவர்கள் ஆயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறாம் ஆண்டிற்கு (*1796*) முன்னரே இந்த அணுசக்தி முறையைக் கண்டுபிடித்து அதன்மூலம் ஔடதங்களைத் தயார்செய்து, மக்களின் பிணிகளைப் போக்க முற்பட்டார்.

விலங்கினத்திலும், மரவினத்திலும் உள்ள மருந்துச் சரக்குகள் நல்ல சுய உருவத்தில் நல்ல சக்தியுடன் இருக்கின்றன. இவைகள் அணுசக்தி முறையால் அணுகப்படும்போது, ஒவ்வொன்றின் மூலத்திலுமுள்ள வியக்கத்தக்க ஔடத நிலைமை வெளியாக்கப்படுகிறது. இதனாலேயே ஓமியோபதி ஔடதங்கள் சிறந்த சக்தி வாய்ந்தனவாக இருக்கின்றன. இவ்விதம் இந்த வியக்கத்தக்க சக்தி ஏற்படுவது அவைகளின் அணுக்களைக் கலந்து அரைப்பதன் மூலமோ அல்லது கலப்பதன் மூலமோ அல்லது மீண்டும் மீண்டும் பிரிப்பதன் காரணமாகவோ ஆகும். அதனால்தான் வீரியப்படுத்துதலாகிய இந்த முறையை "டைனமைசிங்" (Dynamizing), "போட்டண்டைசிங்" (Potentising) என்று அழைக்கிறார்கள்.

இவ்விதம் பல வீரியங்களில் ஔடதங்கள் தயார்செய்யப்படுகின்றன. ஒரு ஔடதத்தின் மூலச் சரக்கின் சாற்றிலிருந்து ஒரு பங்கு எடுத்து, அத்துடன் சம அளவு 'ஆல்ககால்' என்னும் மதுச்சாரத்தை ஒரு புட்டியில் கலந்து ஒரு இரவு ஒரு பகல் நன்றாக மூடி இருட்டறையில் வைத்திருந்தால், அதன் அடியில் நார் போன்ற சில அழுக்குகள் தங்கிவிடும். மேலேயுள்ள தெளிந்த தூய்மையான திராவகத்தைத் தெளிவாக எடுத்துக்கொண்டால் அந்தத் திராவகத்திற்குத் 'தாய்த்திராவகம்' (Mother Tinture) என்று பெயர். இது கெட்டுவிடாதபடி இதிலுள்ள மதுச்சாரம் பாதுகாக்கப்படுகிறது. இந்தத் 'தாய்த் திராவகத்'திலிருந்து ஒரு பங்கை எடுத்து அத்துடன் நூறு பங்கு மதுச்சாரத்தைக் கலந்து குலுக்கினால் வீரியம் இரண்டு என்று பெயர், இந்த இரண்டாவது வீரியத்திலிருந்து ஒரு பங்கு எடுத்து அத்துடன் நூறு பங்கு மதுச்சாரத்தைக் கலந்தால் அதற்கு வீரியம் மூன்று என்று பெயர். இவ்விதம் முன் தயாரித்த வீரியங்களிலிருந்து ஒவ்வொரு பங்குடன் நூறுபங்கு மதுச்சாரம் கலந்து வீரியப்படுத்திக்கொண்டு செல்லுங்கால் *6, 12, 30, 200, 1000, 10* M., 50 M., C. M. M. M. போன்ற வீரியங்கள் கிடைக்கின்றன. இவ்விதம் வீரியப்படுத்தும் ஔடதங்கள்தாம் நோயை உறுதியாக வெல்லவல்லவை.

இவைகளைக் கொடுப்பதால், ஏற்கனவேயுள்ள நோயைப்போன்று ஒரு செயற்கை நோய் உண்டாகி, உள்ளிருக்கும் தாதுக்கள் சுத்தமாக்கப்படுகின்றன. இம்மாதிரியான முறையில் ஔடதங்கள் சரியாகச் செய்யப்படுமானால், ஔடதத்தில் ஒரு சிறப்பான

இரக்கம்

[செல்வன்]

அந்தக் கிழவனை பால்த்தசார் என்றுதான் எல்லோரும் அழைத்தார்கள். அவன் முகம் நன்றாகத் தெரியாதபடி அடர்ந்து கோரைப் புல்போல வளர்ந்திருந்த தாடி மறைத்துக் கொண்டிருந்தது. மூக்கு மாத்திரம் வெளியே தெரிந்தது ஆனால் அதில்கூட ரோமம் முளைத்திருந்தது. நல்லவேளையாக அவன் கண்கள் மாத்திரம் நன்றாகத் தெரிந்தன. அவன் தன் தொப்பியை காதுவரை நன்றாக இழுத்துவிட்டுக்கொண்டிருந்தான். அவன் தாடி வெளுப்பதற்குப் பதிலாக செம்பட்டை நிறத்திலிருந்தது. தாடி அதிகமாக வளர்த்திருப்பவர்கள் மிகவும் அழுத்தக்காரர்கள். எதையும் எளிதில் வெளியிடமாட்டார்கள் என பொதுவாக மக்கள் நம்பினார்கள். அதிலும் செம்பட்டை நிறத் தாடியுடன்கூடிய பால்த்தசாரைப் பொதுமக்கள் வெறுத்து ஒதுக்கினர்.

பால்த்தசார் தோளில் ஒரு கருப்புப் பெட்டியைச் சுமந்துகொண்டு கிராமம் கிராமமாகச் சுற்றிவந்தான். அவன் காகிதம், ஸ்டாம்பு இவைகளை விற்றுவந்தான். யாருமே அவனிடம் அன்பாக நடந்துகொள்வது இல்லை. அவனிடமிருந்து காகிதம், ஸ்டாம்பு இவைகள் வாங்குபவர்கள் அவன்மீது இரக்கப்பட்டு வாங்குவதில்லை. தங்களுக்கு அது தேவையாக இருப்பதாலும், கடையைக்காட்டிலும் விலை மலிவாகவும் அவன் விற்பதாலும் அவனிடம் வாங்கினார்கள்.

கோடைக்காலத்தில் ஒருநாள். வெய்யலின் கொடுமை தாங்காமல் அந்தவேளையில் மக்களின் நடமாட்டம்கூட இல்லை. வழக்கமான தன் தொழிலைச்செய்யும் பால்த்தசார் தனக்குப் பழக்கமான விராண்டோவின் வீட்டிற்கு வந்தான். விராண்டோ நல்ல உள்ளம் படைத்தவள். அவளிடம் ஒரே ஒரு குறை. பெரிய வாயாடி. பேச ஆரம்பித்தால் நிறுத்துவது என்பது இயலாது. ஊரில் எங்காவது கூட்டம், விழா என்றால் விராண்டோ அங்கு இல்லாமல் இருக்கமாட்டாள்.

விராண்டோவின் வீட்டிற்குள் நுழைந்ததும் தலையிலிருந்த தொப்பியைக் கையில் எடுத்தான், மரியாதைக்காக அல்ல அதிக வெப்பத்தைத் தடுப்பதற்காக. நெற்றியில் வழியும் வியர்வையைத் துடைத்துக்கொண்டான். விராண்டோ பால்த்தசாரின் தலையைப் பார்த்தாள். அவளுக்கு ஆச்சரியமாகப்போய் விட்டது. முகத்தில் மாத்திரம் அடர்ந்திருக்கும் ரோமம் தலையில் கொஞ்சம்கூட இல்லாமல் நன்றாக வழுக்கையாயிருந்தது தலை. வழுக்கைத் தலையைபற்றிக் கிண்டலாக ஏதாவது சொல்லலாம் என நினைத்தாள் விராண்டோ. ஆனால் சொல்லவில்லை. பால்த்தசார் நீங்கள் நினைப்பதுபோல் ஒரு கரடியல்ல என்பதைத் தெரிவிப்பதுபோல இருந்தது அவனுடைய வழுக்கைத்தலை. விராண்டோ பால்த்தசாரிடம் ஏதேதோ கேட்டாள். அவனும் ஏதோ பதில் சொன்னான். தாடி வாயருகில் சிறிதே அசைந்தது. அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வருகின்றன என்பதைக் காட்டியது அது. அவனுக்கு 67 வயதாகிறது என்றான். விராண்டோவுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவளுக்கும் அதே வயதுதான். வயதைப் பொறுத்தவரையில் பால்த்தசார் கூறி

மாறுதல் உண்டாவதுடன், அந்த ஔடதத்தின் உயிர்நாடி வெளியே கொண்டுவரப்படுகிறது. இதன் சக்தி நம் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் மிகமிக சக்திவாய்ந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அவர் கண்ட உண்மைகளைக் கொண்டு 'ஸ்கார்லெட்' காய்ச்சலுக்கு 'பெல்லடொன்னா' கொடுக்கலாம் என்று சிபார்சு செய்தார். இவ் ஔடதத்தில் 'பெல்லடொன்னா' மாத்திரைச் சரக்கு ஒரு கிரெயினில் 1/432999 பாகமே இருந்தது. இவ்வாறு சுமார் இருபது ஆண்டு காலங்கள் ஒவ்வொரு மருந்தையும் ஆராய்ச்சி செய்து, 1810-ஆம் ஆண்டில் 'ஓமியோபதி' என்னும் பெயரில் பல புத்தகங்களை வெளியிட்டார். அந்த ஆண்டில் 'ஓமியோபதி' பிறந்தது என்னலாம்.

யதுபோல இருவரும் ஒரே 'வகுப்பைச்' சேர்ந்தவர்கள். அன்று அவன் அதிகம் காகிதங்களும் ஸ்டாம்பும் விற்கவில்லை. ஒரேநாளில் ஐந்து அல்லது ஆறு ரூபாய்க்காவது விற்றால்தான் அதிருஷ்டம் என நினைத்தான் அவன். வயதோ 67. தள்ளாத வயது. காலமோ கோடை. நல்ல வெயில். கிராமம் கிராமமாகச் சுற்றித் திரிவது அவனுக்கு இன்பம்தராது, பாவம் என்றெண்ணி இரண்டு ரூபாய்க்கு காகிதங்களும், இரண்டு ரூபாய்க்கு ஸ்டாம்பும் வாங்கினாள் லிராண்டோ.

அதன்பிறகு தன்னுடைய வியாபாரத்தை நடத்த வீடுவீடாகச் சென்று திரும்பிவரும் வழியில் மறுபடியும் லிராண்டோ இருக்கும் தெருவழியாக வந்தான். வெய்யலின் கொடுமை அதிகமாயிருந்தது. திடீரென்று ஏதோ உள்ளுணர்வினால் தூண்டப்பட்டு அவனைக் கூவி அழைத்தாள் லிராண்டோ.

“கவனமாய்க் கேள், பால்த்தசார்! தள்ளாத இந்த வயதில் நமக்கு இன்பம்தரும் நல்ல காரியங்களைச் செய்வதுதான் நல்லது. நான் என்ன சொல்கிறேன் என்று புரிகிறதா? உன் பெட்டியில் இருக்கும் சாமான்கள் எல்லாம் மொத்தம் என்ன விலை ஆகும்?” என்றாள்.

“காகிதங்கள். ஸ்டாம்ப் எல்லாம் சேர்த்து 10 ரூபாய்க்கு சாமான்கள் இருக்கின்றன.”

“இந்தா பணம் எடுத்துக்கொள்! இதை எல்லாம் அனாதை விடுதியில் உள்ள சிறு குழந்தைகளுக்குக் கொடுத்தால், அவர்களுக்கு உபயோகமாக இருக்கும்” என்றாள்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட பால்த்தசார் வீட்டைவிட்டுக் கிளம்பி தெருவுக்கு வந்தான். மனிதர்களில் ஒரு குறிப்பிட்ட வயதுடையவர்களுக்கு மகிழ்ச்சி உடனே ஓடிவருவதில்லை. ஆகாயவிமானத்திலிருந்து வெடிகுண்டு வீசும் விமானிபோல் இது சரியா, தவறா என்று நீள நினைத்துப் பிறகே முடிவு செய்வார்கள். அமைதியாக உட்கார்ந்து சிந்திப்பதற்குத் தகுதியான இடம் ஊர்க்கோடியிலிருக்கும் பெரிய விடுதிதான். பால்த்தசார் அங்கு சென்றான். அங்குச் சென்றால் ஒன்றும் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்க முடியுமா? ஒரு கோப்பை ஒயின் கொண்டுவரச்சொன்னான். ஒயினின் சுவையே மறந்துபோன நிலையில் இருந்த அவனுக்கு ஒயின் மிகவும் சுவையாக இருந்தது. கடைக்காரனை அழைத்து எனக்கு என்ன கொண்டுவந்து கொடுத்தாய் எனக் கேட்டான். அவன் பயத்துடன் நடுங்கிக் கொண்டே ஒயின்தான் கொடுத்தேன் என்றான். உண்மைதான். எனக்கு ஒயினின் சுவை மறந்துபோய்விட்டதால் தெரியவில்லை என்றான். அதன் விலை எவ்வளவு இருக்கும் என்பது தெரியாமல், சுவைத்துக்கொண்டே குடித்தான். குடித்து முடிந்ததும் தான் ஏதாவது கொஞ்சம் சாப்பிடவேண்டும்போல இருந்தது. இந்த நினைவு வந்ததும் அவன் பசி அதிகரிப்பதுபோல் இருந்தது. தன் இளமைப்பருவத்தில் பட்டணத்துக் கடையில் தான் உண்ட உயர்ந்த உணவுவகைகளின் ஞாபகம் வந்தது. அவற்றில் சில பெயரைக்கூறி இங்கே கிடைக்குமா? என்றான். கடைக்காரன் கொண்டுவந்து வைத்தான். சாப்பிட்டு முடிந்த பிறகு, இதெல்லாம் சாப்பிடாமல் வெறும் வறட்டு ரொட்டியை மாத்திரம் தின்றால் உண்பதில் ஏற்படும் உவகை பாமர மக்களுக்கு எங்கே தெரியப் போகிறது என்று நினைத்தான். உணவு வகையில் பணக்காரர்கள் அதிக கவனம் செலுத்துவது சரிதான் என்று நினைத்தான். இந்த மாதிரி அடிக்கடியா சாப்பிடுகிறோம், என்றைக்காவது ஒருநாள்தானே. இன்னும் கொஞ்சம் அதிகம் சாப்பிட்டால் என்ன என நினைத்து கொண்டுவரச்சொன்னான். எவ்வளவு பசி! அதிகம் சாப்பிடச் சாப்பிட தான் எவ்வளவு பசியாயிருக்கிறோம் என்பது புரிந்தது அவனுக்கு. தீர்க்கமுடியாத பசிக்கு ஆளாகிவிட்டான் அவன். அவன் வயிறுமட்டுமல்ல உடல், உள்ளம், தலை எல்லாம் பசி பசி எனக் கத்தத் தொடங்கின. அவன் வாழ்நாள் முழுவதும் போதிய உணவு இல்லாமல் இருந்ததை, இறந்துபோன அந்த நாட்களின் இன்பத்தை ஒரேநாளில் ஈடுசெய்வதுபோல மேலும் மேலும் சாப்பிட்டுக்கொண்டே இருந்தான். பாவம்! களைப்பு மேலிட்டதால் நிறுத்திக்கொள்ளவேண்டியதாயிற்று.

வயிறு புடைக்க உண்பது மிக ஆபத்தான பழக்கம். மனிதன் தன் ஒரு விருப்பத்தை நிறைவேற்றியதும் மற்ற விருப்பங்களையும் நிறைவேற்ற விரும்புகிறான். சாப்பிட்டு முடிந்ததும் கிராமத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தான். உணவிற்கு அடுத்தபடியாக வாழ்க்கையில் தேவையானது உண்டகளைப் புத்தீர எங்கேயாவது நிழலில் அமர்வதுதான் எனத் தோன்றியது. அந்த இன்பத்தையும் நுகர விரும்பினான். உல்லாசமான வாழ்க்கைக்கு ஒரு முறை இடம்கொடுத்துவிட்டான். மறுமுறையும் தவிர்க்கமுடியாததாக ஆகிவிட்டது. சாலையோரத்தில் இருந்த பெரிய மர நிழலில் உட்கார்ந்தான். மாலை வரை வேலை

யொன்றுமின்றி அங்கேயே உட்கார்ந்திருந்தான். இது முதல் தடவை. ஆனல் அன்றிலிருந்து இந்த இன்பத்தை விட மனமின்றி மறுநாளும் அப்படியே நடந்தான். அதற்கும் மறுநாள் இவ்விதமே உண்பதிலும், உறங்குவதிலுமே கழிந்தது. ஆனல் லிராண்டோ கொடுத்த ரூபாய்களும் கரைந்தன. காசுதான் இல்லை வியாபாரத்தையாவது தொடங்கலாம் என நினைத்தான். ஆனல் அருகிலுள்ள நகரத்திற்குச் சென்று காகிதங்கள், ஸ்டாம்ப் இவைகள் வாங்கப் போதிய பணம் கையில் இல்லை.

தன் நிலையை நினைத்தான். அழவேண்டும் போலிருந்தது. அது ஆத்திரமாக மாறி கோபத்தின் உச்ச நிலையை அடைந்தான். "அவள் தான் செய்வது என்ன என்று தெரியாமல் என்னைச் சந்தித்தாள். என் வயிற்றுப் பிழைப்பில் மண்போடுகிறோம் என்ற நினைவின்றி என் பொருள்கள் அனைத்தும் பறிமுதல் செய்துகொண்டாள். அவற்றிற்குப் பதிலாக என் கையில் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து என்னைக் கெடுத்துவிட்டாள். எனக்கு உதவி செய்வதாக நினைத்து, என்னை உபத்திரவத்திற்கு ஆளாக்கி விட்டாள். ஆனல் ஏழைகள் என்ன முட்டாள்களா, பணக்காரர்களின் இந்த வலையில் சிக்கிக் கொள்வதற்கு!"

லிராண்டோவின் வீட்டிற்கு விரைந்தான். "உன்போன்ற பெண்களுக்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது?" என்றான். பாவம் லிராண்டோ! அவள் முன்னோர்கள் விட்டுச் சென்ற பணம்தான் அவளிடம் இருந்தது. அதுகூட அதிகமில்லை. திருமணம் செய்து கொள்ள வருபவர்கள் அதிகப் பணம் கேட்டதால் திருமணமே செய்துகொள்ளாமல் இருந்தாள். பால்த்தசாரைப் பார்த்து நடுநடுங்கி விட்டாள். அவனிடம் அவள் வாங்கிய காகிதம், ஸ்டாம்ப் இவற்றை எல்லாம் திருப்பிக் கொடுத்தாள். பழைய பால்த்தசார், "பேப்பர், ஸ்டாம்ப்" என்று கூவிக்கொண்டு சென்றான்.

[இக்கதை சார்லஸ் லூயி பிலிப் என்பவர் எழுதிய ஒரு பிரஞ்சுக் கதையின் மொழி பெயர்ப்பாகும்.]

●●

பேரறிஞர் பெற்ற வரவேற்பு

அமெரிக்காவிலுள்ளவர்களின் பழக்க வழக்கங்களை எப்பொழுதும் நையாண்டி செய்வது காலம்சென்ற பேரறிஞர் பெர்னட் ஷாவின் வழக்கமாகும். ஒரு சமயம் அவர் அமெரிக்காவிற்குச் சென்றிருந்தபொழுது அமெரிக்காவிலுள்ள பத்திரிகைகளெல்லாம் வெகுவாக புகழ்ந்து வரவேற்று செய்திகளைப் பிரசுரித்தன. ஆனல் மியாமி பகுதியிலுள்ள ஒரு பத்திரிகை பெர்னட் ஷாவின் வருகையின் விபரத்தைக் கீழ்க்கண்டவாறு பிரசுரித்தது:

திருமதி பெர்னட் ஷா மியாமி பகுதிக்கு வந்து சேர்ந்தார்.

திருமதி பெர்னட் ஷா இந்த இந்த நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துகளுக்குச் சென்றார்.

திருமதி பெர்னட் ஷா இன்னின்ன நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

—என்ற விபரங்கொண்ட நீண்ட நிகழ்ச்சிநிரல் ஒன்று பிரசுரித்து அதன் அடியில் சிறிய எழுத்துக்களில்,

திருமதி பெர்னட் ஷாவுடன் அவரது கணவர் ஜார்ஜ் பெர்னட் ஷா என்ற நாடக ஆசிரியரும் வந்திருந்தார்.

கள்வனுக்கேற்ற கள்ளி!

[எழினி]

பேதைப் பருவத்தைக் கடந்து பெதும்பைப் பருவத்தை எய்தியிருக்கிருள் அப்பெண்ணழகி! மங்கைப் பருவத்துக்குரிய அழகெல்லாம் அவளிடம் இப்பொழுதே குடியேறத் தொடங்கியிருக்கின்றன!

அவள் செல்வக்குடியில் பிறந்த அருமைப் பெண்ணுதலால், அணிகலன்கள் பலவற்றையும் அணிந்திருக்கிருள். அணிகலன்கள் அவளுக்கு அழகு ஊட்டுகின்றனவா அல்லது அவள் அணிகலன்களுக்கு அழகு ஊட்டுகிருளா என்று கண்டுபிடிக்க முடியாதபடி, அவள், அவ்வளவு அழகுத் தோற்றத்துடன் காட்சியளித்து வருகிருள்.

அவள் விளையாட்டுப் பண்பிலேயே திளைத்துக்கிடக்கிருள்; அச்சம்—மடம்—நாணம்—பயிர்ப்பு போன்ற மங்கைக்குரிய பண்புகள் அவளை இன்னமும் அவ்வளவாக ஆட்கொள்ளவில்லை. தோழிப் பெண்களோடு கூடிக்கொண்டு மலர் கொய்யப் பூந்தோட்டம் போதல், நீராடிக் களித்தல், ஓடிப்பிடித்து விளையாடுதல், பந்து ஆடுதல், மணல்வீடு கட்டி மகிழ்தல்போன்ற களியாட்டங்களில் பொழுதுபோக்கிக்கொண்டிருக்கிருள்.

அழகே உருவெடுத்த ஆணழகனை இளைஞன் ஒருவன், ஒருநாள், அந்தப் பெண்ணழகியைக் கண்டுவிடுகிருன். கண்டதும் காதலுள்ளங்கொண்டுவிடுகிருன். அவளது அழகைக் கண்ணுல் பருகி மகிழ்வதற்கு அவன் நாள்தோறும் அப்பக்கம் வருவதும், அவளது விளையாட்டுக்களை எட்டினின்று பார்ப்பதும், மகிழ்வதும், பின் ஏகுவதும் ஆன செயல்களில் ஈடுபடுகிருன், அவளோடு எப்படியேனும் நட்புக்கொள்ளவேண்டும் என்று துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிருன்.

ஒருபொழுது தலைவி தெருவில் மற்றத் தோழிப் பெண்களோடு சேர்ந்துகொண்டு மணல் வீடு கட்டிக்கொண்டிருக்கிருள். தலைவன் தலைவியைப் பேச்சுவம்புக்கு இழுக்க வேண்டும் என்று கருதி, அவள் கட்டிக்கொண்டிருக்கும் மணல் வீட்டின்மீது அறியாதவன்போல் நடந்து செல்லுகிருன். அந்த மணல் வீடு அவன் காலடிபட்டுச் சிதைந்து போய்விடுகிறது. தலைவி அவன்மீது சினங்கொண்டு ஏசுகிருள். அவன் அறியாது செய்துவிட்டதுபோல நடிப்புசெய்துகொண்டு, தானே அந்த மணல்வீட்டை மீண்டும் கட்டித் தருவதாக வாக்களித்து, அப்படியே கட்டித் தருகிருன். தலைவனது பணிவும் அன்பும், தலைவியினது சினத்தைப் போக்கி அவளது உள்ளத்தைக் கவருவனவாகின்றன.

தலைவி விளையாடி மகிழும் இடத்திற்குத் தலைவன் நாள்தோறும் வருகிருன். தலைவியுடனும், அவளது தோழிகளுடனும் ஏதாவது பேச்சுக்கொடுத்தும், அவர்களுக்கு உதவிகள் பல செய்தும் அவர்களது விளையாட்டுக் கூட்டாளியாக நாளடைவில் மாறிவிடுகிருன். தலைவியோடு குறும்பு விளையாட்டுக்கள் விளையாடுவதிலே அவனுக்குத் தனி மகிழ்ச்சி ஏற்படுகிறது. தலைவி மணல் வீடு கட்டினுல் வேண்டுமென்றே வேடிக்கைக்காக அதனைக் காலால் அழிப்பது, அவள் கூந்தலிலே சூடியுள்ள மாலையைப் பிடித்து இழுத்து அறுத்துக்கொண்டு ஓடுவது, அவளுடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடி ஒளிந்துகொள்வது போன்ற குறும்பு விளையாட்டுக்களில் அவன் ஈடுபடும்போதெல்லாம் அவளுக்குத் தொல்லையும் துயரமும் ஏற்படும், ஆனுல் அவன்மீது அவள் கொண்டிருக்கும் அன்பு அந்தத் தொல்லையையும் துயரத்தையும் அரை நொடியில் பஞ்சாய்ப் பறக்கச் செய்துவிடும்.

இப்படியான காதல் விளையாட்டுகளில் சில நாட்கள் கழிகின்றன. அதுமட்டுமல்லாமல் தலைவனும் தலைவியும் பகற்குறி—இரவுக்குறிகளை ஏற்படுத்திக்கொண்டு களவொழுக்கம் நடத்தி வருகிறார்கள்.

தன் மகள் பருவமங்கை ஆகிவிட்டாள், இனி அவளை வெளியே செல்லவிடுவது தகாது, அலர் கிளம்ப வழி ஏற்பட்டுவிடும் என்று கருதிய தாய் தலைவியை வீட்டைவிட்டு அகலாமல் வீட்டிலேயே இருக்கும்படி பணித்துவிடுகிறாள். தலைவியைக் காணமுடியாமல் தலைவன் பெரிதும் வருந்துகிறான். தலைவியை அவளது வீட்டிலேயே போய்ப் பார்த்துவிடுவது என்ற துணிவோடு தலைவன் ஒரு நாள் அவள் வீடு நோக்கிச் செல்கிறான்.

வீட்டில் தலைவியும் அவளது தாயும் பொழுதுபோக்காக உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது அந்த இளைஞன் வீட்டின் வாயிலண்டையில் வந்து நிற்கிறான். அவனைக் கண்டதும் தலைவி திடுக்கிட்டுத் திகைத்துப் போய்விடுகிறாள். என்ன செய்வதென்று அவளுக்குத் தோன்றவில்லை. கண்ணும் காதும் இருட்டுகின்றன; நா பேச எழாமல் குளறுகிறது. அவனைப் பார்க்காதவள் போல் வேறு பக்கம் திரும்பிக்கொண்டு, தன்னைத்தானே ஒருவாறு தேற்றிக்கொண்டு, அன்னையோடு பொதுவான பேச்சை வழக்கம் போல் பேசிக்கொண்டிருக்கிறாள்.

இளைஞன் சிறிதுநேரம் காத்திருந்துவிட்டு, தலைவியின் கவனத்தை இழுக்க என்ன செய்யலாம் என்று நீடு சிந்தித்து, ஒரு முடிவுக்கு வந்து, " யார் வீட்டில்? வீட்டிலுள்ளோரே! எனக்கு நா ஒரே வறட்சியாக இருக்கிறது. நான் குடிப்பதற்குச் சிறிது தண்ணீர் தருவீர்களா?" என்று கேட்கிறான்.

அதனைக் கேட்ட தாய், தன்மகளைப்பார்த்து " பெண்ணே! அவனுக்குக் குடிக்க நீர் வேண்டுமாம். தகட்டுப் பொன்னால் செய்யப்பட்ட குவளையில் சிறிது நீர் கொண்டுவந்து கொடு " என்று கூறுகிறாள்.

தலைவிக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. தாயின் கட்டளையைத் தட்டமுடியாதவளாய், வேறு வழியின்றி, ஒரு குவளையில் தண்ணீர் மொண்டுகொண்டு, அவனை இதற்கு முன் அறியாதவள்போல் நடிப்புச் செய்து கொண்டு அவனிடம் போய்க் குவளையை நீட்டுகிறாள்.

இளைஞன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு அவள் நீட்டிய குவளையை ஒருகையால் வாங்கிக்கொண்டு, மற்றொரு கையால் அவளது வளையல் ஒலி எழுப்ப அவளது முன்னங்கையைப் பிடித்து இழுக்கிறான். அச்சம்—மடம்—நாணம்—பயிர்ப்பு ஆகிய எல்லாம் சேர்ந்து அவளை ஒரு உலுக்கு உலுக்குகின்றன. அச்சத்தால் அவள் " அம்மா! இவன் செய்கிற செயலை ஓடிவந்து பாரீர் " என்று அலறிவிடுகிறாள்.

மகள், தன்னை அலறிக் கூவி அழைக்கிறாள் என்பதை அறிந்த அன்னை, இடித்துப் புடைத்துக்கொண்டு அலறித் துடித்துக் கொண்டு ஓட்டமாக வாயிலண்டைக்கு ஓடி வருகிறாள்.

" என்ன கண்ணே? என்ன செய்தான்?" என்று தாய் மகளைக் கேட்கிறாள்.

தலைவி அந்த இளைஞன்மீது கொண்டிருக்கும் காதலன்பின் காரணமாக அவனைக் காட்டிக்கொடுக்கக்கூடாது என்று கருதி, ஒரு பொய்யின் மூலம் அவனைத் தப்புவிக்க வைக்க வேண்டும் என்று அந்த நொடிப்பொழுதே எண்ணுகிறாள். உடனே தாயிடம் " இவன் நீர் குடிக்கும்போது ஒரே விக்கலாக விக்கினான்! அதனால் என்னமோ ஏதோ என்று அஞ்சி தங்களை அவ்வளவு விரைவாக வரச் சொல்லி அழைத்தேன் " என்று கூறுகிறாள்.

தாய் தலைவியின் கூற்று உண்மை என்று நம்பி, அந்த இளைஞனது முதுகைப் பலதடவைகள் தடவிக்கொடுக்கிறாள்.

பிறகு அந்த இளைஞன் தலைவியைத் தன் கடைக்கண்ணால் ஒரு கவ்வு கவ்வுவதுபோல் கண்ணடித்துவிட்டுப், புன்சிரிப்பைத் தெரிவித்துவிட்டுப் போய்விடுகிறான்.

இந்த நிகழ்ச்சி நடந்து சில நாட்களுக்கெல்லாம் தலைவிக்கு மணமுடிக்க எண்ணித் தலைவியின் தாயும் தந்தையும் கூடிக்கலந்து திருமணப் பேச்சுப் பேசுகிறார்கள். மகளுக்கு யாரை மணாளனைத் தேர்ந்தெடுப்பது என்பது பற்றித் தாயும் தந்தையும் அடிக்கடி உரையாடிக்கொள்வதைத் தலைவி மறைந்துநின்று செவிமடுக்கிறாள்.

தனக்கு விளையாட்டுத் தோழனாக விளங்கிய அந்த இளைஞனையே தான் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்பது தலைவியின் நீங்கா விருப்பமாகும். தன்னுடைய விருப்பத்தைத் தாய்தந்தையரிடம் எப்படி தெரிவிப்பது என்று தெரியாமல் விழிக்கிறாள். இறுதியாகத் தன் தோழியின் மூலம் தெரிவிக்கலாம் என்ற முடிவுக்கு வருகிறாள்.

ஒருநாள் தோழியைத் தன்னந்தனியான ஒரு தனி இடத்திற்கு அழைத்துச் சென்று, தன்னுடைய விருப்பத்தை மறைமுகமாக அவளிடம் வெளிப்படுத்த எண்ணுகிருள். தாம் தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் போது, மணல் வீட்டைச் சிதைத்துக், கூந்தல் மாலையை அறுத்துக்கொண்டு ஓடி, வரிப் பந்தை எடுத்துக்கொண்டு ஓடி ஒளிந்து விளையாடும் இளைஞனைப் பற்றிக் கூறி அவனை முதலில் தோழிக்கு அறிமுகப்படுத்துகிருள் தலைவி. அந்த இளைஞன் ஒருநாள் தன் வீடு நோக்கி வந்ததையும், தானும் தாயும் மட்டும் அப்பொழுது வீட்டில் இருந்ததையும், அவன் குடிக்க நீர் வேண்டும் என்று கேட்டதையும், தாய் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வரச் சொல்லியதையும், அப்படியே தான் கொண்டு போய்க் கொடுத்ததையும், அவன் தன் கையைப் பிடித்து இழுத்ததையும், தான் அச்சங்கொண்டு அம்மா என்று அலறிக் கூப்பிட்டதையும், அன்னை அலறித்துடித்து ஓடிவந்ததையும் அவனைக் காட்டிக்கொடுக்கக் கூடாது என்று கருதி அவன் விக்கினுன் ஆகவே கூப்பிட்டேன் என்று தான் தாயிடம் பொய் கூறியதையும், அதுகேட்டுத் தாய் அவன் முதுகைப் பலதடவைகள் தடவிக் கொடுத்ததையும், பிறகு செல்லும்போது தன்னைக் கொல்லுவதுபோல் அந்தத் திருட்டுப்பையன் கடைக்கண்ணுல் பார்த்து புன் சிரிப்பைத் தெரிவித்துவிட்டுச் சென்றதையும் ஒன்றுவிடாமல் தலைவி தோழியிடம் கூறுகிருள்.

தலைவியின் உள்ளம் அந்த இளைஞனின்மீது படிந்துவிட்டது, அவனையே தான் அவள் திருமணம் செய்துகொள்ள எண்ணியிருக்கிருள் என்பதைத் தோழி மறைமுகமாக அறிந்துகொள்கிருள். தலைவியின் விருப்பத்தைத் தாய்தந்தையரிடம் தெரிவிப்பதாகவும், அவள் விரும்பும் திருமணத்தை அவள் விரும்பியவாறே செய்துமுடித்துவைப்பதாகவும் தோழி தலைவிக்கு உறுதிமொழி அளிக்கிருள்.

தலைவி பெருமகிழ்ச்சியோடு வீடு திரும்புகிருள்!

ஃ ஃ ஃ

இது கலித்தொகையில் குறிஞ்சிக்கலி 15-ஆம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்டு தீட்டப்பட்ட காதலோவியமாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் சங்ககாலப் பெரும் புலவரான கபிலர் ஆவார்.

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவி(ல்)நாம் ஆடும்
மணல்சிற்றில் காலில் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்(கு) அன்னை
அடர்பொன் சிரகத்தால் ஆக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்ருள் எனயானும்
தன்னை அறியாது சென்றேன்மற்(று) என்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னுய் இவனொருவன் செய்ததுகாண் என்றேனு
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினுன் என்றேனு அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற்(று) என்னைக்

கடைக்கணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்

செய்தான்அக் கள்வன் மகன்.

[குறிஞ்சிக்கலி—15]

[பொழிப்புரை : ஒளிபொருந்திய வளையினை யுடையவளே ! நான் சொல்லுவது ஒன்றைக் கேட்பாயாக ! தெருவில் நாம் விளையாடும் மணலால் செய்த சிறிய வீட்டைக் காலால் அழித்துக், கூந்தலிலே சொருகிவைத்த மாலையை அறுத்து, வரியினையுடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடி நாம் வருந்தும்படி குறும்புச் செயல்களைச் செய்யும் சிறுவனாகிய காவலில்லாதவன், முன்னொரு நாளிலே அன்னை நானும் சேர்ந்து வீட்டில் இருந்தபோது, " இல்லில் உறைகின்றவர்களே ! உண்ணப்படும் தண்ணீரை விரும்பினேன் !" எனச் சொல்லிக்கொண்டுவந்து நின்றவனுக்கு, அன்னை, " விளங்குகின்ற அணிகலன்களை உடையவளே ! உண்ணும் நீரைத் தகட்டுப் பொன்னால் செய்த குவளையாலே எடுத்துக்கொண்டுவந்து உண்ணப் பண்ணுவித்து வா " என்று சொன்னாள் ; என்று சொல்லுகையினாலே நானும் சிறுபட்டியாக இருக்கின்ற அவனைத் தெரியாதவள்போலச் சென்றேன் ; சென்ற பிறகு அவன் என்னுடைய வளையணிந்த முன்னங்கையைப்பிடித்து என்னை இழுத்துத் தொல்லைகொடுக்க நான் அஞ்சி, " தாயே ! இவன் ஒருவன் செய்த ஒரு செயலைப் பாராய் !" என்று கூவ, அத்தாயும் கூப்பிட்டவுடன் ஓடிவருதலைச்செய்ய, அதனை மறைத்து அப்படிச் செய்ததனை நான் "உண்ணுநீர் விக்கி வருந்தினான் பார்" என்று ஒரு பொய்யைக் கூறினேனாக, அத்தாயும் அவனது முதுகைப் பலகாலும் அழித்தழித்துத் தடவப், பிறகு என்னைத் தன் கடைக் கண்ணாலே கொல்வான்போல பார்த்துத், தன் மனமகிழ்ச்சியைத் தருங் கூட்டத்தை அக்கள்வனாகிய மகன் செய்தான் ! இந்த நிகழ்ச்சி நிகழ்ந்தபடியைப் பார் !

சுடர் - ஒளி ; தொடி - வளையல் ; அடைச்சிய - சொருகிவைத்த ; கோதை - மாலை ; பட்டி - கட்டுக்காவலில்லாத பையன் ; தெருமந்திட்டு - அஞ்சி ; நகைக்கூட்டம் - புன்சிரிப்புச் செய்தல்.]

பண்டைக் காலத் தமிழ் மக்கள் திருமணம் செய்துகொண்டு காதல் செய்வதைவிட, காதல் செய்துவிட்டுத் திருமணம் செய்து கொள்வது என்ற வழக்கத்தைத்தான் மிகச் சீரியபண்பாடாகக்கொண்டிருந்திருக்கின்றனர் என்பதை இச்செய்யுளால் இனிது அறிந்து கொள்ளலாம்.

தன்னுடைய களவொழுக்கம் தாய்க்குத் தெரிந்துவிடாதபடி இருக்கவேண்டும் என்று அஞ்சியும், காதலனைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்று கருதியும் பொய் சொல்லித் தப்பித்துக் கொள்ளும் தலைவியின் பண்பு நினைந்து நினைந்து பாராட்டுவதற்குரியதாகும். தலைவியின் உளப்பாங்கு எப்படியெல்லாம் இருக்கும் என்பதைக் கபிலர் மிக அழகுற வடித்தெடுத்துக் காட்டியுள்ளார்,

தன்னுடைய காதலனைச் "சிறுபட்டி" என்றும், "கள்வன் மகன்" என்றும் தலைவி பழிப்பதுபோல் புகழ்ந்து கூறும் நயப்பாடு படித்துப் படித்து இன்புறுதற்குரியதாகும்.

சிறுமியர் மணல் வீடுகட்டுதல், அதனைக் குறும்பு படைத்த ஆண்பிள்ளைகள் காலால் அழித்துக் கலைத்தல், காதலிகளின் கூந்தலிலுள்ள மாலையைக் காளைகள் பறித்துக் கொண்டு வேடிக்கை செய்தல், பெண்கள் வரிப்பந்து விளையாடுதல், அதனைக் காதலர்கள் எடுத்துச் சென்று ஒளித்து வைத்துக் கொள்ளுதல், விக்கல் ஏற்பட்டால் முதுகைத் தடவிக்கொடுத்தல் போன்ற பண்டைக் காலப் பழக்கங்கள் இந்தச் செய்யுளில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

பண்டைத் தமிழகத்துக் காதல் மணம் எவ்வளவு சிறந்து விளங்கிற்று என்பதற்கு இச்செய்யுள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

611

தொடர்கதை:

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சகுந்தலா விடுதலை ஆவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள்தானிருந்தன. நாள் நெருங்க, நெருங்க, குலசேகரனுக்கு புதிய கவலைகள் உண்டாக ஆரம்பித்தன. சகுந்தலா வெளிவந்ததும் அவளை அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்கு வரலாமா என்பதைப்பற்றி அவன் திடமான முடிவுக்கு வரவில்லை. அவனுடைய சின்னம்மா, அஞ்சலையண்ணி அவ்வளவு சுலபத்தில் ஒத்துக்கொள்ளவே மாட்டார்கள். வேறு சாதி, அதிலும் குழந்தை பிறந்து சிறைச்சாலையில் இருந்துவிட்டு வந்தவள். அவளை உயர்ந்த சாதியைச் சேர்ந்ததாகப் பெருமைப பட்டுக்கொண்டிருக்கும் அஞ்சலை எப்படி ஏற்றுக்கொள்வாள்? குலசேகரன் வேறுயாரிடமும் அதைப்பற்றிச் சொல்லவில்லை, சொன்னாலும் தங்கம் ஒருத்தியிடம்தான் சொல்லமுடியும்.

தங்கத்தைப் பார்த்தபொழுது, சகுந்தலாவைப் பற்றிய பேச்சு வந்தது. சேகரன் மெதுவாகப் பேச்சை வளர்த்தான்.

"சகுந்தலா திரும்பி வந்ததும் எங்கே அவள் தங்கப் போகிறாள்?''

தங்கத்திற்கு அந்தக் கேள்வி பெரிதாகப் படவில்லை. "அதைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும். டாக்டர் சஞ்சீவி வீட்டிலேயே தங்கலாம். அல்லது பழையபடி அநாதைச் சிறுவர் இல்லத்தில் வேலை பார்த்துக்கொண்டு அங்கே தங்கியிருக்கலாம்.''

"டாக்டர் சஞ்சீவி ஒன்றும் சொல்லமாட்டாரா?''

"டாக்டர் சஞ்சீவியா'' சொல்வதற்கென்ன இருக்கிறது. சகுந்தலாவை அவருக்கு நிரம்பப் பிடித்திருக்கிறது. தன் வீட்டில் தங்குவதைப்பற்றி அவர் தடையொன்றும் சொல்ல மாட்டார். ஆனால் சகுந்தலாவின் நிலை மிகவும் கஷ்டமானதுதான். ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டு, தண்டனை பெற்று, சிறையில் இருந்து வெளிவந்ததும், சமூகத்தில் அவள் ஒரு வேண்டாதவளாகக், கருதப்படுவாள. சிறையில் இருந்ததைவிட அதிக வேதனையாக வல்லவா அது இருக்கும்.''

"ஆமாம்! முதலில் அப்படித்தான் தோன்றும். மற்றவர்கள் ஏதும் நினைக்காவிட்டாலும், மற்றவர்கள் நினைக்கிறார்கள் என்ற அச்சம் இருந்துகொண்டேயிருக்கும். நாளடைவில் பழகிவிடும். சகுந்தலாவைப் பார்த்தபொழுது, மிக நல்ல பெண்ணென்றே தெரிகிறது. மறுபடியும் யாரையாவது மணந்து, வாழ்க்கை நடத்தும் வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்கும். யார் கண்டது?''

தங்கம் சிறிது ஆச்சரியமடைந்தாள். "அப்படி யாரிருக்கிறார்கள்? சகுந்தலா நல்ல பெண்தான். சமூகத்தில் உண்டாகும் பழியை ஏற்றுக்கொண்டு, அவளை மணந்துகொள்ள யார் முன் வருவார்கள்? அந்த அளவு தைரியம் யாருக்கு இருக்கிறது. உனக்கு இருக்குமா?''

தங்கத்தின் திடீர்க் கேள்வி குலசேகரனைத் திகைக்க வைத்துவிட்டது. கேள்வியைப் போட்டாளே யொழிய, சேகரைப் பற்றி அவளுக்கு எந்த சந்தேகமும் உண்டாகவில்லை என்பது தெரிந்தது. "நான் உத்தேசமாகச் சொன்னேன். நீ என்மீது கேள்வியைத் திருப்பி விட்டாயே?'' என்று குலசேகரன் சிரித்துக்கொண்டு பேச்சை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

மறு தடவை சகுந்தலாவைப் பார்த்தபொழுது தனக்கும் தங்கத்துக்கும் நடந்த உரையாடலைப்பற்றி குலசேகரன் சொன்னான்.

"அதைப் பற்றியெல்லாம், நான் முன்கூட்டி நினைத்துப் பார்க்கவில்லை. நான் வந்து தங்குவதைப்பற்றி டாக்டர் சஞ்சீவி ஒன்றும்

சொல்லமாட்டார். ஆனல் உங்களுக்கு......" என்று சகுந்தலா நிறுத்திக் கொண்டாள்.

"தங்கம் சொன்னபொழுது, உடனே சொல்லிவிடலாமென நினைத்தேன். ஆனல் நீ வெளிவந்ததும், உன்னை அழைத்துக் கொண்டு நேரில் போய் நின்ருல், அவர்களுக்கு ஆச்சரியம் உண்டாகும். அந்த ஆச்சரியத்துக்காகத்தான் நான் இப்பொழுது பேசாமலிருக்கிறேன்."

"அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டாம். நீங்கள் திரும்பவும் யோசித்துப் பார்த்து..."

"திரும்பவும் அதே பேச்சுகளை எடுக்க வேண்டாம். எல்லாம் யோசித்து முடிவு செய்த்துதான். வேறு ஏதாவது இருந்தால் பேசலாம், சொல்ல மறந்துவிட்டேனே! டாக்டர் சஞ்சீவி பெங்களூர் போயிருக்கிருர். வருவதற்கு இன்னும் இரண்டு வாரமாகும்!"

"நான் இன்னும் ஒருவாரத்தில் வெளிவந்து விடுவேனே!"

"வந்ததும் அவர் வீட்டில் தங்கி யிருக்கச் சொன்னர்."

"டாக்டர் தங்கம் ஏதாவது சொன்னர்களா?" சகுந்தலா தங்கத்தைப் பார்த்து ஒரு மாதத்துக்கு மேலாகிறது. சகுந்தலா சிறைக்குள் போனதற்குப்பின் டாக்டர் சஞ்சீவியும் தங்கமும் இரண்டு தடவை வந்து பார்த்தனர். அப்புறம் வரவில்லை. குலசேகரன் மட்டும் வாரம் தவருமல் பார்த்துவந்தான்.

"தங்கத்திற்கு வேலை யதிகம். ஆதலால் வரவில்லை. என்னைப் பார்க்கும்பொழுது உன்னைப்பற்றித்தான் அதிகம் பேசுகிருள்."

குலசேகரன் எழுந்துபோகும் நேரமாயிற்று. கடைசியாக "நான் கொடுத்த பையை டாக்டர் தங்கம் பத்திரமாக வைத்திருப்பதாகச் சொன்னர்களா?" என்று சகுந்தலா கேட்டாள்.

"அதைப்பற்றிச் சொன்னேன். அப்படி என்ன முக்கியமானதாக அதில் இருக்கிறது?"

"ஏதாவது இருக்கும்!" என்று புன்னகையுடன் சகுந்தலா வெளியேறினள்.

சிறைக்குள் வந்ததிலிருந்து, சகுந்தலா புன்முறுவலை குலசேகரன் அன்றுதான் முதல் தடவையாகப் பார்த்தான்.

அந்தப் புன்முறுவல், குலசேகரனின் மனக்கண்முன் இரண்டு மூன்று நாட்கள் மறையாது இருந்தது.

"சகுந்தலா விடுதலை பெறுவதற்கு இன்னும் ஐந்தே நாட்கள்தானிருக்கின்றன." வீட்டினுள் நுழைந்த குலசேகரன் சொன்ஞன். மேஜையருகில் அமர்ந்து தங்கம் கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள்.

"சனிக்கிழமை போயிருந்தாயா?"

"ஆமாம்!"

"என்னிடம் ஏன் சொல்லவில்லை?"

"நான்தான் சொன்னேனே, திடீரென்று வேலை வந்தால் போகவேண்டியிருக்குமென்று!" உனக்கு வேலை அதிகம் இருக்கிறது போலிருக்கிறது!

"வந்தால் ஒரே அவசரம்! இரு, நானும் வருகிறேன்! உன் வீட்டுக்குப் போய்விட்டு, அங்கிருந்து டாக்டர் சஞ்சீவியுடன், ஆஸ்பத்திரிக்குப் போய்வருகிறேன்."

"சீக்கிரம் புறப்படு!"

தங்கம் கடிதத்தை எழுதி முடித்தாள்.

"என்னுடன் படித்த பெண், இப்பொழுது லண்டனில் இருக்கிருள். அவளுக்கு கடிதம் எழுத நினைத்து, இன்றைக்குத்தான் முடிந்தது."

தங்கம் மாடிக்கு உடை மாற்றிவரப் போக, குலசேகரன் பத்திரிக்கையைப் புரட்டிக்கொண்டிருந்தான்.

வெளியில் கார் சத்தம் கேட்டது. கமலநாதனும், நித்தியானந்த சாமிகளும் இறங்கி வந்தனர். வீட்டினுள் நுழையும்போதும், "முருகா! முருகா!" என்று உச்சாடனம் செய்ய நித்தியானந்த சுவாமிகள் மறக்கவில்லை.

"ஹல்லோ! குட்மார்னிங்!" என்று குலசேகரன் கமலநாதனுக்குக் கையுயர்த்தினன்.

"குலசேகரஞ? எப்படி யிருக்கிறீர்கள்?" என்று கமலநாதன் பதிலுக்குக் கேட்டான். அவன் குரல் மிகவும் அடங்கி, குளிர்ந்து இருந்தது. குலசேகரனை அவன் விரும்பவில்லை எனபது நன்ருகத் தெரிந்தது.

கமலநாதன் தன்னறைக்குள் போனன், நித்தியானந்தசாமிகளை அழைத்துக்கொண்டு. நித்தியானந்தசாமிகள் "முருகா! முருகா!" என்று கூவிக்கொண்டு, பேசத் துவங்கினர். அவர் பேசுவதைக் கவனிக்காமல் குலசேக

ரன் என்ன செய்கிறுன் என்பதைப் பார்த்த படி கமலநாதன் இருந்தான்.

தங்கம் மாடியிலிருந்து இறங்கி வந்தாள். குலசேகரன் எழுந்து நின்றதும், கமலநாதன் பார்வை மறைக்கப்பட்டது. தங்கம் ஒரு கடி தத்தை எடுத்துக் கொடுப்பது தெரிந்தது. குலசேகரன் அதைத் தன் பையில் போட்டுக் கொண்டான். தங்கம் முன்னுல் சென்ருள். குலசேகரன் கமலநாதன் அறைக்குள் வந்து, "நான் போய்வருகிறேன்" என்று விடை பெற்றுக்கொண்டு வெளியேறினுன்.

"உங்களுடைய நண்பரா?" நித்தியானந்த சாமியார் கேட்டார்.

"ஆமாம்!" என்று பதிலிருத்தான் கமல நாதன் சலிப்புடன்.

"அவர்களுடன் பேச உங்களுக்கு நேர மில்லை போலிருக்கிறது. தம்பதிகள் போய் விட்டார்கள்!"

தம்பதிகள்—கமலநாதனின் மண்டையில் பலமான அடி விழுந்தது போலிருந்தது. பத றிப்போய் எழுந்து நின்ருன்.

"என்ன? என்ன?" என்று நித்தியானந்த சாமிகளும் எழுந்தார்.

"நீங்கள் உடனே போங்கள்! என் முன் நிற் காதீர்கள்!" என்று கமலநாதன் சத்தம்போட் டான். நித்தியானந்த சாமிகள் ஒன்றும் புரி யாதவராய் சென்ருர்.

கமலநாதன் தோட்டத்திற்குள் போனுன். கடுமையான வெய்யல்! அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. மயக்கம் வருவதுபோல் பார்வை மங்கியது. மாடிக்குப்போய் தன் படுக்கையில் விழுந்தான்.

தம்பதிகள்—அந்த சாமியார் எவ்வளவு அபாண்டமாகச் சொல்லிவிட்டார்.

நித்தியானந்த சாமிகள் வீசிய சொற்கள் அவன் மனதைத் துளைத்துக்கொண்டிருந் தன, ஆத்திரமும் கோபமும் அலைமோத அணைமீது அவன் படுத்திருந்தான்.

மறுகணம்—அவர்கள் நடந்துகொள்வதும் —ஒரு வேளை நித்தியானந்த சாமிகள் சொல் வதும் ஓரளவு உண்மைதானே?

ஒருபுறம் மனம் அந்தக் கேள்வியை உதறித் தள்ளியது. மறுபுறம் அந்தக் கேள்வி மீண் டும் மீண்டும் புதிய பலத்துடன் முளைத்தது.

சந்தேகம் பலமடைய ஆரம்பித்தது. ஒவ் வொரு தடவையும் லேசாகத் தோன்றி மறைந்தது. இப்பொழுது நிலைபெறத் தொடங்கியது. தங்கம் வந்ததும் நேருக்கு நேர் கேட்டுவிடலாம். ஆனுல் உண்மை வெளிப்படாது.

அன்று காலையில் தங்கமும் குலசேகரனும் வெளிக்கிளம்பும்பொழுது, தங்கம் ஒரு கடிதத் தைக் கொடுத்தாளே, அது என்ன கடிதம்? தங்கம் அவனிடம் கடிதம் கொடுக்க வேண் டிய அவசியமென்ன?

கமலநாதன் பித்துப் பிடித்தவன்போல, மாடியில், தோட்டத்தில் அலைந்துகொண் டிருந்தான். நடுப்பகல் உணவு உண்ண வில்லை. மாலையும் அவன் வெளிக்கிளம்ப வில்லை.

இரவு ஏழுமணிக்கு கீழே கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. கமலநாதன் ஜன்னல் வழி யாக எட்டிப்பார்த்தான். தங்கம் இறங்கினுள். அவளைத் தொடர்ந்து யாரும் இறங்கவில்லை. வண்டியினுள்ளிருப்பவருடன் தங்கம் இறங்கி நின்றபடி பேசிக்கொண்டிருந்தாள். ஏதோ பேச்சுக்கு அவள் சிரித்தாள், உள்ளேயிருப் பது குலசேகரனுயிருக்கவேண்டும், கையுங் களவுமாகப் பிடித்துச் சரியாகத் தண்டிக்க வேண்டும் என்று கமலநாதன் வேகமாகக் கீழே இறங்கிவந்தான்.

வண்டியினுள்ளிருந்தது டாக்டர் சஞ்சீவி. தன்னுடைய வீண் சந்தேகத்துக்காகக் கமல நாதன் வெட்கமடைந்தான். ஆனுல்...ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

தங்கம் வீட்டினுள் வந்தாள். கமலநாதன் அவளை ஏறிட்டுப் பார்க்காமல் மாடிக்குச் சென்ருன்.

படுக்கையில் படுத்துக் கமலநாதன் தூக்கம் பிடிக்காமல் புரண்டான். குழப்பம்—சந்தேகம் —வேதனை அவனை அல்லற்படுத்தின. திரும் பிப் படுக்கும்பொழுது, தங்கம் ஒரு அலமாரி யைத் திறந்து, அதனுள் துழவிக்கொண்டிருப் பதைப் பார்த்தான். தங்கம் ஒரு தோற்பையை எடுத்து, அதிலிருந்து ஒரு காகிதப் பையை எடுத்தாள். அந்தப் பையைக் கையில் சிறிது நேரம் வைத்திருந்தாள். "இதைப் பத்திரமாக வைக்கவேண்டும். இன்னும் ஒருவாரம்!" என்று தங்கம் சொல்லிக்கொண்டது கமல நாதன் காதுகளில் விழுந்தது.

மறுநாள் தங்கம் வீட்டைவிட்டுப் புறப்பட் டதுதான் தாமதம் கமலநாதன் மாடிக்கு விரைந்துவந்து, அங்கிருந்த அலமாரியைப்

எபிக்கூரசு

['ராதா']

இயற்கையை அடக்கியாளும் திறனை இன்று மனிதன் பெற்றிருக்கிறான். அவனது ஆராய்ச்சிப் பெருகப் பெருக, அவன் கண்ட முடிவுகள் வெற்றியைக் கொடுக்கக் கொடுக்க, மேலும் மேலும் இயற்கையை அடக்கும் திறனைப் பெற்றுக்கொண்டே போகிறான்; பெற்றுக்கொண்டே போவான், அவனது முயற்சி நின்றுவிடவில்லை.

ஆனால் பண்டைய நாட்களில் இயற்கையின் தன்மையை அறிய இயலாத மக்கள் இயற்கையில் தோன்றும் நிகழ்ச்சிகளைக் கண்டு பயந்தனர். அந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணமாக, 'ஆண்டவன்' என்று ஒருவன் இருக்கிறான் என்று நம்பினர். அவனே அண்டத்தைப் படைத்து அதை ஆட்டிவைக்கிறான் என்று கொண்டனர். இதுவல்லாமல் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு கடவுள் எனப் பலப்பல கடவுள்களையும் கண்டுபிடித்தனர். உலகில் துன்பங்கள் நிகழாதிருக்கவும், இறப்புக்குப்பின் மனித 'ஆவி,' 'நரகம்' சென்று இடர்படாது 'மோட்சம்' அடைவதற்கும், அந்தக் கடவுள்களிடம் பயங்கொண்டு, 'காணிக்கைகள்', 'வழிபாடுகள்', 'விரதங்கள்.' இவை மூலம் 'அவை'களைத் 'திருப்தி' படுத்திவிட முடியும் என்று நம்பினர்.

இவ்வித மூடக் கொள்கைகளை ஒதுக்கித் தள்ளி, நிகழ்ச்சிகளுக்குரிய காரண காரியங்களை ஆராய்ந்து புதிய கருத்துக்களை வெளியிட்டவர்களில் கிரேக்க நாட்டைச் சேர்ந்த பேரறிவாளர் எபிக்கூரசு (Epicurus) ஒருவராவார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன், கி.மு. 341-ம் ஆண்டில் சமோசு (Samos) என்ற தீவில், கிரேக்கம் தன் உரிமைகளை யிழந்து மாசிடோனியவின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த சமயத்தில், எபிக்கூரசு பிறந்தார். அவரது தந்தை ஒரு பள்ளி ஆசிரியர். தாய், 'மந்திரங்கள்' செய்து அதன் மூலம் நோய்களை விரட்டும் ஒரு தந்திரக்காரி. எபிக்கூரசு தாயுடன் மந்திர வேலைக்காக சென்று சென்று, 'மந்திரங்கள்' மூலம் நடைபெறும் தந்திரங்களை அறிந்தான். அதன் மூலமே மக்களிடம் பரவியிருந்த மூடக்கொள்கைகளை வெறுக்கமுற்பட்டான்.

எபிக்கூரசின் முதல் கவனம் மெய்விளக்கத்துறை (Philosophy) யறிவில் படிந்தது. எபிக்கூரசு பன்னிரண்டு வயது மாணவனாக இருக்கும்பொழுது, ஆசிரியர் ஒருநாள் உலகின் படைப்பு பற்றி விளக்கிக்கொண்டிருந்தார். "படைப்புக்காலத்திற்கு முற்பட்ட ஒரு ஒழுங்கற்ற கலப்பிலிருந்துதான் (Chaos) ஒவ்வொரு பொருளும் தோன்றியிருக்கின்றன" என்றார் அந்த ஆசிரியர்.

"அப்படியானால், அந்த ஒழுங்கற்ற கலப்புப் பொருள் எங்கிருந்து வந்தது?" என்று எபிக்கூரசு எழுந்து கேட்டான்,

---

பார்த்தான். என்றைக்குமில்லாமல் அது பூட்டப்பட்டிருந்தது. தங்கம் சாவிகளை வைக்குமிடம் அவனுக்குத் தெரியும். எல்லா இடங்களையும் தேடிவிட்டு, கடைசியாக அவளுடைய மேஜையறையில் இருப்பதைக் கண்டான்.

அலமாரியைத் திறந்து, ஒவ்வொரு சாமானையும் அவன் ஆராய்ந்தான். கடைசியாக ஒரு அடித்தட்டில் மறைவாக வைக்கப்பட்டிருந்த தோற்பையை எடுத்தான்.

தோற்பைக்குள் காகித உறை!

காகித உறையை அவன் கிழித்தான். அதினுள்ளிருந்து கையினால் எழுதப்பட்டக் கடிதங்கள் விழுந்தன.

காதற் கடிதங்கள்! அதிலும் குலசேகரன் எழுதியவை!

நித்தியானந்த சாமிகள் சொல்லியது உண்மையாகிவிட்டது!' என்று கமலநாதன் உறுமிக்கொண்டான்.

(தொடரும்)

ஆசிரியர் திகைத்து, "எனக்குத் தெரியாது; எவருக்குமே தெரியாது!" என்று கூறினாராம்.

உலகம் படைக்கப்பட்டதற்கு முன் இருந்த ஒழுங்கற்ற கலப்புப் பொருளின் ஆரம்பத் தோற்றத்தை யறிவதே தனது வேலையாக இருக்க வேண்டுமென உறுதி கொண்டான் எபிக்கூரசு.

தனது பதினெட்டாவது வயதில் எபிக்கூரசு ஏதென்சு நகருக்கு வந்தார். அப்பொழுது அரசியல் காரணமாக நாடு குழப்ப நிலையிலிருந்தது. அலெக்சாண்டரால் அமைக்கப்பட்ட அரசு சர்வாதிகாரக் கோலம்பூண்டு குடியரசு உணர்ச்சியை கிரேக்கர்களிடமிருந்து நீக்க முயற்சித்தது. கிளர்ச்சிக்காரர் என்று கருதப்பட்ட கிரேக்கர்களின் நாட்டுரிமை மாற்றப்பட்டு அந்த இடத்தில் மாசிடோனியர்கள் குடியேற்றப்பட்டனர். பிறந்த நாட்டைவிட்டு வேற்றுநாட்டிற்கு அடைக்கலம் புகுந்தவர்களில் எபிக்கூரசின் பெற்றோரும் இருந்தனர். அவர்கள் ஆசியா மைனர் என்ற நாட்டிற்கு சென்றனர்- ஏதென்சு வந்த கொஞ்ச நாட்களுக்குப் பிறகு எபிக்கூரசு பெற்றோரைச் சென்று கண்டான்.

மெய்விளக்கத் துறையில் தான் கண்ட கனவுகளை மறந்துவிட எண்ணினர், முடியவில்லை. ஆனால் பருப்பொருள் பற்றியும் (Physical), புலங்கடந்த நுண்பொருள் பற்றியும் (Metaphysical) சில உண்மைகளைக் கண்டார். அதுவே அவருக்கு ஒரு மன ஆறுதலை அளித்தது. நன்கு ஆராய்ந்த புதிய உண்மைகளுடன் ஏதென்சு நகருக்குத் திரும்பி ஏதென்சு நகரத்தையடுத்து ஒரு வீடும் தோட்டமும் வாங்கி அதில் மெய் விளக்க அறிவைக் கற்பிக்கத் தகுந்த ஒரு கழகத்தை நிறுவினர்.

அதற்கு எல்லா வருப்பினருக்கும் எல்லா பிரிவினருக்கும், ஆண் பெண் என்ற வேறுபாடின்றி யாவருக்கும் அனுமதி தரப்பட்டது. யாவரும் ஒத்த மனப்பான்மையுடன், சமநிலையாகப் பழகும் விதத்தில் ஆசிரியரும் மாணவர்களும் ஒனருக ஆந்தக் கழகத்தில் சேர்ந்தனர்.

எபிக்கூரசின் கொள்கைளை மறுத்த ஏதென்சு நகர மக்களில் சிலர் அவ்வரைத் தூற்றலாயினர். அவரது கல்விக்கழகத்தை சிற்றின்பக்கூடமென வம்பளந்தனர். ஆனல் இதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. எபிக்கூரசின் தோட்டத்தில் வாழ்ந்தோர் மிகமிக எளிமையான வாழ்க்கையையேக் கொண்டிருந்தனர்.

எபிக்கூரசு தனது கொள்கைகளை விளக்கிக் கூறும் வகையில் முந்நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதினாராம். இவற்றில் இயற்கையின் தன்மை பற்றி எழுதிய நூல்கள் மட்டும் முப்பத்தேழு இருந்தனவாம். அவைகளில் ஒன்றுகூட நமக்குக் கிடைக்காத வகையில் யாவும் மறைந்துவிட்டன. ஆனல் லுக்ரேடியசு (Lucretius) என்பவர் தீட்டிய **பொருள்களின் இயற்கைத்தன்மை** (On the Naure of Things) என்ற காவியத்தில் எபிக்கூரசின் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளது. இந்தக் காவியமும் எபிக்கூரசினல் எழுதப்பட்ட மூன்று கடிதங்களும், டியேசெனசு லேயெர்டியசி (Diogenes Laertius) என்பால் காபபாற்றப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இதுவல்லாமல் சிசரோ, புளூடார்க் ஆகிய இருவரும் எழுதிய சில கட்டுரைகளிலும் எபிக்கூரசின் கொள்கைகள் பற்றிச் சிறிது குறிப்புகள் கிடைக்கின்றன. இவைகளே இன்று நமக்கு எபிக்கூரசை அறிவிக்கும் ஆதார ஏடுளாகும்.

பொருள்களின் இயற்கைத்தன்மை என்ற காவியத்தைத் தீட்டிய லுக்ரேடியசு, எபிக்கூரசு வழி வந்த மெய்யறிவர். எபிக்கூரசுக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின் ரோமாபுரியில் வாழ்ந்தவராகும். லுக்ரேடியசு, எபிக்கூரசின் கொள்கைகளைப் படித்து அதைத் தனது காவியத்தில் புகுத்தினர். உலக இலக்கிய வரலாற்றில் ஒரு புதுமையான காவியமாக உலகத்திலுள்ள 'பைபிள்'களில் ஒன்ருக—பகுத்தறிவுவாதியின் பைபிளாக லுக்ரேடியசின் காவியம் விளங்குகின்றது.

எபிக்கூரசின் கருத்துப்படி உயிர்வாழ்வதின் நோக்கம் வாழ்க்கையின்பத்தை நுகர்வதற்கேயாகும். நன்மை செய்கிற எந்த ஒரு கடவுளின் குமாரர்களல்ல நாம், எவ்விதக் கவலையும் கொள்ளாது விளங்கும் இயற்கையின் குமாரர்களே. முயற்சித்தால் வாழக்கையை மகிழ்ச்சி நிரம்பியதாக நாம் அமைத்துக்கொள்ளலாம். அதை எவ்வகையில் முயற்சிப்பது? மனித இனத்தைச் சூழ்ந்துள்ள. இரண்டு அச்சங்களை —கடவுளைப்பற்றிய அச்சம், இறப்பைப்பற்றிய அச்சம், இவைகளைத் தவிர்க்கவேண்டும்.

நாம் கடவுள்களைப்பற்றி அச்சங்கொள்ளத் தேவையில்லை. அவைகளுடைய அடிமைகளல்ல நாம், அவைகளும் நம்மை ஆளுவதற்கில்லை. இந்தப் பிரபஞ்சம் (Universe) கடவுள் என்ற ஒருவரின் கைத்திறனல் திட்டமிடப்பட்டு உண்டாக்கப்பட்டதல்ல. எல்லையில்லாத

பரந்தவெளியில் அணுக்களின் இயக்கத்தினுல் தற்செயலாக உருவானதே இந்தப் பிரபஞ்சம்.

எபிக்கூரசின் இந்த அணு ஆற்றல் கொள்கையின் அடிப்படையைக் கொண்டு வளர்ந்திருப்பதுதான் இன்றைய பிரபஞ்ச விளக்கம். ஆனல் அணு விளக்கத்தை முதன் முதல் கொடுத்தவர் டெமோகிரிடசு (Democritus) என்பவராகும். அந்த அனு விளக்கத்தை அறிந்து எபிக்கூரசு பிரபஞ்சத்தை விளக்கினர்.

படைப்புக் காலத்திற்கு முற்பட்ட ஒழுங்கற்ற கலப்பின் (Chaos) ஆரம்பத் தோற்றத்தைப் பற்றி எபிக்கூரசின் மனதில் எழுந்த ஐயப்பாடும் தீர வழி ஏற்பட்டது ஒழுங்கற்ற கலப்புப் பொருள் என்று ஒன்றும் இருக்க முடியாது என்று கண்டார். உலகம் பாழ்பட்ட ஒழுங்கற்ற கலப்பிலிருந்து உருவாகியிருக்க முடியாது; ஏனெனில், ஒன்றுமில்லாத நிலையிலிருந்து எந்த ஒரு பொருளும் உருவாக முடியாது. அதே போல் உலகம் பாழ்பட்ட ஒழுங்கற்ற ஒரு கலப்பிற்கும் மாற முடியாது; ஏனெனில், ஒன்றுமில்லாத நிலைக்கு ஒரு பொருளும் மாருது. ஆகவே பிரபஞ்சத்திலுள்ள பொருள்களின் மொத்தம் எப்பொழுதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது; ஒன்றுமில்லாத நிலையிலிருந்து ஒன்றும் வரவில்லை ஒன்றுமில்லாத நிலைக்கு ஒன்றும் போகவில்லை.

ஆகையினுல் இந்த உலகம் நிலையான எல்லையற்ற ஏதோ ஒரு பொருளினுல் அமைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் முக்கியமெனக் கருதப்படுகிற அணுக்களாகும். உலகின் அமைப்பை உருவாக்கியிருக்கும் அணுக்கள், பிறப்பும் இறப்பும் அற்ற நிலையான தன்மை கொண்டவையாகும். எல்லையில்லாத பரந்தவெளியில் அவை நகர்ந்துகொண்டிருக்கின்றன. திடீரென்று வீசும் காற்றினுல் சுழலில் இழுக்கப்படும் மழைத் துளி போல, அவை பாதையை விட்டுத் திரும்பி அவ்வப்போது ஒன்ரோடொன்று மோதி ஒன்ருகக் கலந்து ஒரு புதிய பொருளாக மாறுகின்றன. அப்படி ஏற்பட்டதுதான் நட்சத்திரங்களும், பூமியும், திங்களுமு, ஞாயிறுமாகும். அணுக்களில் எடையில், உருவில், அளவில் மாறுபட்டவைகள் இருக்கின்றன. அளவில்லாத வேறுபட்ட பலப்பல பொருள்கள் உண்டாகி அதன்மூலம் உலகம் உருவாகுவதற்கு மாறுபாடுடைய அணுக்கள்தான் காரணமாகும்.

நாம் வாழும் இந்த உலகம் ஒன்று மட்டும் தான் இருக்கிறது என்று கொள்வதற்கில்லை. இதைப்போலவே பெரிதாகவும் இன்னும் வியக்கத்தக்கதாகவும் பல இருக்கின்றன. அங்கேயும் கடல்களும், மலைகளும் உயிர்வாழ்வனவும் இருக்கின்றன. அணுக்கள் எல்லையற்ற பரந்தவெளியில் சுழன்று அவ்வப்போது ஒரேவித சூழ்நிலையில் ஒரேவிதக் கலப்பாகச் சேர்ந்து உலகங்களை உருவாக்கிக் கொண்டேயிருக்கின்றன.

மனித இனத்தின் இன்பத்திற்கும், துன்பத்திற்கும், வாழ்வுப் போராட்டத்திற்கும்-கடவுள்களுக்கும் சிறிதுகூடத் தொடர்பு கிடையாது. நமது படைப்பில் கடவுளின் பங்கு ஏதுமே இல்லை, நமது முடிவுபற்றிய கருத்து அவைகளுக்கு முழுக்க முழுக்கக் கிடையாது. எந்தப் பகுத்தறிவுள்ள கடவுளும் தனது சொந்த மதிப்பிற்காகக் கோயில் எழுப்பச் சொல்லி விட்டு, அதை அழிக்கவல்ல இடிகளையும் உண்டாக்காது. எது ஒன்று முடிவும் அழிவும் இல்லாது இருக்கின்றதோ, அது விருப்பு வெறுப்புகளுக்கும், இரக்கம், சீற்றங்களுக்கும் கட்டுப்படாத ஒன்றேயாகும். கடவுளைப்பற்றிய பயமே கூடாது. உண்மையான மதம் கடவுள் பயத்தையும், மூடநம்பிக்கையையும் கொண்டிருக்காது.

எபிக்கூரசின் இந்தக் கொள்கைகளைக் கண்டித்து மதவாதிகள் கேலிசெய்தனர். வழிகாட்டி ஒன்றுமில்லாது பொருள்களின் அணுக்கள் ஒன்றுசேர்ந்து மரங்களாகவும், பறவைகளாகவும், மிருகங்களாகவும் மனிதர்களாகவும் எப்படி ஏற்பட்டது? எவ்வகை அணுக்கள் எந்தமுறையினுல் ஓமர் போன்ற கவிஞர்களையும், டெமோகிரிடசு போன்ற அறிவியலறிஞர்களையும், எபிக்கூரசு போன்ற மெய்யறிவர்களையும் உண்டாக்கியது? எபிக்கூரசு இவைகளுக்கு பதில் கூருமலில்லை. முயற்சியின் திறனுலும், தவற்றின் தெளிவாலும், பண்படாத நிலையிலிருந்து பண்பட்ட நிலைக்கு படிப்படியாகப் பொருள்கள் வளர்ச்சியுற்றதனுலும்; தகுதியற்றது நீக்கலாலும், உள்ளது சிறத்தலாலும்;—உயிர்களின் படிமுறைத்தோற்றத்தினுல் (Evolution) மரம், செடி, கொடி, பறவை, விலங்கு, மனிதன் யாவும் தோன்றின என்று எபிக்கூரசு விளக்கினர். டார்வினுக்கு இருபத்திரண்டு நூற்ருண்டுகளுக்கு முன்னரே எபிக்கூரசு உயிர்களின் படிமுறைத் தோற்றத்தைப் பற்றிக் கூறியிருப்பதை லுக்ரேடியசின் காவியம் நன்கு தெரிவிக்கின்றது.

இறப்பு பற்றியும் எபிக்கூரசு தனது கொள்கைகளை வெளியிட்டிருக்கிருர். உடலைப்போ

(35-ம் பக்கம் பார்க்க)

617



(31)

பிதுர்லோகத்தில் இருப்பவர்களைத் திருப்தி செய்யவும், உடலை விட்டுப் பிரிந்த ஆத்மா மேலுலகம் அடையவும், தானங்கள், சிரார்த்தங்கள் செய்யவேண்டுமெனப் புராணங்கள் கூறுகின்றன. இந்த தானங்களின் வகைகளையும், சிரார்த்தங்களின் அவசியத்தையும் காருடம் என்ற புராணம் விரிவாகக் கூறுகிறது.

ஒருசமயம் நரகங்கள், பாவங்கள் செய்தவர்கள் நரகங்களிலிருந்து எப்படித் தப்புவது, பிரிந்த ஆத்மா மேலுலகம் செல்ல என்ன செய்வது என்பனபோன்ற கேள்விகள் கருடனுக்கு எழுந்ததாம். மற்றவர்களைக் கேட்டுத் தெளிவுபெறாமல், கடைசியாகப் பிரபஞ்ச இரகசியங்களையெல்லாம் நன்கு தெரிந்ததாகக் கூறப்படும் தனது எசமான் மகாவிட்டுணுவையே கருடன் கேட்டான். தனது வாகனத்துக்கு ஏற்பட்ட சந்தேகங்களை திருமால் ஒவ்வொன்றாக எடுத்துத் தீர்த்தார். நரக, மோட்ச லோகங்களையும், சிரார்த்தங்கள் தானங்களைப் பற்றியும் கருடன் நன்கு தெரிந்துகொண்டான். சூதமுனிவர் என்பவர் ஒருசமயம் கருடனைப் பார்த்தபொழுது, திருமாலிடம் தான் கேட்டவற்றைக் கருடன் சூதமுனிவருக்குச் சொல்ல, சூதமுனிவர் அவற்றைச் சௌனகாதி முனிவர்களுக்குச் சொல்ல, அது புராணமாயிற்று. ஆகவே புராணத்தின் மூலம் சாட்சாத் திருமாலிடமிருந்து பெறப்பட்டதாகும். கருடனுக்குச் சொல்லப்பட்டதால், கருடபுராணம் காருடம் என்று கூறப்பட்டது. கருடபுராண சாரோத்தரத்தில் 7 காண்டத்திலிருந்து, 13 காண்டம்வரை, இறந்தவர்களுக்காகச் செய்யப்படவேண்டிய சிரார்த்தங்களைப் பற்றி விளக்கப்பட்டிருக்கிறது.

இறந்தவர்களுக்காகவும், பிதுர்க்களுக்காகவும் புத்திரர்கள் செய்யும் சிரார்த்தங்களின் அருமைபெருமைகளைக் கருடாழ்வாருக்கு உபதேசிக்கவந்த மகாவிட்டுணு, ஒரு கதை சொல்ல ஆரம்பித்தார்.

மகோதய என்ற ஊரில் பப்ருவாகனன் என்ற அரசன் இருந்தான். அவன் மிக நல்ல அரசனும். எப்படியென்றால், மிகப்பலம்பொருந்தியவன், வேத முறையில் வழுவாதவன், தான தருமங்களை இடைவிடாமல் செய்தவன், பிராமணப் பிரியன், க்ஷத்திரியர்களின் கடமையைத் தவறாது செய்பவன்.

ஒருநாள் பப்ருவாகனன், மந்திரி பிரதானியர்கள் பின்தொடர, காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். வேட்டையாடும்பொழுது, மன்னன் ஒரு மானைத் துரத்திச் சென்றான். அம்பு தைத்துப் புண்பட்டபோதிலும், மான் ஓடியபடி, அந்தக் காட்டைவிட்டு மற்றொரு காட்டுக்குள் புகுந்துவிட்டது. இரத்தம் சிந்தியிருக்கும் பாதையைத் தொடர்ந்து அரசன் குதிரைமீது வந்தான். ஆனால் மான் தப்பி ஓடிவிட்டது. வெய்யலாலும், வேட்டையாடிய களைப்பாலும், அங்கிருந்த ஏரியில் நீராடி, பக்கத்தில் இருந்த அத்திமரத்து நிழலில் இளைப்பாற வந்தான்.

அத்திமரத்தின் அடியில், பப்ருவாகனன் உட்கார்ந்ததும், பயங்கரக் கூச்சலுடன் ஒரு பிசாசு அவன்முன் நின்றது.

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

“பிசாசே! நீ யார்?” என்று அரசன் கேட்டான்.

“மன்னனே! நீ தொட்டமாத்திரத்தில், நான் புனிதமடைந்தேன்.”

“ஏ! பயங்கர சொரூபமே! என்ன பாவங்கள் செய்ததால், நீ இந்த அலங்கோல நிலை அடைந்தாய்! உன்னுடைய கதையை விளக்கமாகக் கூறுக! என்ன காரியங்கள் செய்தால் நீ மோட்சலோகம் போகமுடியும்?”

அந்த ஆவி சொல்லத்தொடங்கியது. “நான் வைதாச நகரத்தில், வைசிய குலத்தில் பிறந்து, சீரும் சிறப்புடனும் வாழ்ந்தவன். என் பெயர் சுமிதவன் என்பதாகும். ஏராளமான கிராமங்களும், அளவற்ற செல்வமும், நவரத்தினங்களும், மாளிகைகளும், அரண்மனைகளும் எனக்குச் சொந்தமாயிருந்தன.

எனது மாளிகையில் சத்காரியங்கள் நடைபெற்றுக்கொண்டேயிருக்கும்; மும்மூர்த்திகளுக்கு பூசைகள் தூபதீப நைவேத்தியங்கள் நடைபெறும். பிராமணர்களுக்கு ஏராளமான தான தருமங்களைச் செய்திருக்கிறேன்.

இவ்வளவு புண்ணிய காரியங்களைச் செய்தும் எனக்குப் பெரிய குறையொன்று இருந்தது. புத் என்ற நரகத்திலிருந்து என்னை மீட்க, ஒரு புத்திரன் இல்லை. எனக்குச் சிரார்த்தங்களைச் செய்ய, புத்திரனோ, உறவினரோ, நண்பர்களோ யாரும் இல்லாமற்போய்விட்டனர். சிரார்த்தங்கள் செய்யப்படாததால், நான் வாழ்ந்தபொழுது எவ்வளவோ புண்ணியங்கள் செய்தபோதிலும், பயனில்லாமற்போயிற்று. ஆதலால் என்னை இந்தக் கதியிலிருந்து மீட்டு விமோசனம் தர, நீ எனக்காகச் சிரார்த்தங்கள் செய்வாயாக!” என்று ஆவி அரசன் பப்ருவாகனனைக் கேட்டுக்கொண்டது.

“இறந்தவர்களையும், பிதுர்க்களையும் திருப்தி செய்ய, என்னசெய்யவேண்டும்?” என்று அரசன் கேட்டான்.

“வேதங்களில் சொல்லியிருக்கிறபடி புண்ணிய காரியத்தைத் துவக்கவேண்டும். சிரார்த்தக் கும்பங்கள் பதிமூன்றை பிராமணர்களுக்குத் தானமாகத் தரவேண்டும்; அத்துடன் கட்டில், பசு, இவைகளையும் தானமாகக் கொடுக்கவேண்டும்” என்று ஆவி சொல்லியது.

“சிரார்த்தக் கும்பம் என்றால் என்ன? எப்படிச் செய்வது?” என்று அரசன் கேட்டான்.

“கேளும், அரசனே! இந்தத் தானத்தைப் போல, இறந்தவர்களுக்கு மோட்சமளிக்க வல்ல வேறு சாதனம் வேறு ஏதும் கிடையாது. பாவங்களையெல்லாம் நாசமாக்கவல்ல சிரார்த்தம் அது! அந்தத் தானத்தை விவரித்துக்கூறுகிறேன், கேளும்!

மிக உயர்ந்த பொன்னால், ஒரு நல்ல அளவுள்ள குடத்தைச் செய்யவேண்டும். அந்தக் குடம் நிறைய, நல்ல வெண்ணெயை வைக்க வேண்டும். பிரம்மா, ஈசன், கேசவன் ஆகிய மும்மூர்த்திகளையும் பூசித்து, பின் வெண்ணெய் நிறைந்த அந்தப் பொன்குடத்தை ஒரு பிராமணனுக்குத் தானம் செய்துவிடவேண்டும். இதற்கு ஒப்பான தானம் வேறு எதுவும் இருக்கமுடியாது.”

இவ்வாறு ஆவி சொல்லியதும், அரசன் பப்ருவாகனன் தன் நகரத்துக்குத் திரும்பி வந்து, பொன்னாலான குடங்களில் நிறைய வெண்ணெயை அடைத்துப் பிராமணர்களுக்குத் தானம் செய்ய, காட்டில் அலைந்துகொண்டிருந்த ஆவி மேலுலகம் சென்றதாம்.

சிரார்த்தம் செய்ய மகனில்லையென்றாலும் பாதகமில்லையாம். மற்றவர்கள் யாராவது சிரார்த்தக்குடம் (பொன்குடம்) செய்து தானம் செய்தால் போதும். ஆவி திருப்தியடைந்துவிடும்.

இதைப் பாற்கடலில் சயனித்திருக்கும் பரந்தாமன், பட்சிராசன் கருடனுக்குச் சொன்னாராம்.

ஆவி பிரிந்தபின் சிரார்த்தங்கள் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், மேலுலகம் செல்லமுடியாமல், ஆவி அலைந்துகொண்டிருக்கும். எனவே சிரார்த்தங்கள் செய்யுங்கள். இது வேதவாக்கு. வேதவாக்குக்கூட அல்ல, மும்மூர்த்திகளில் நடுநாயகமாக விளங்கும் மகாவிஷ்ணுவின் கட்டளை. அதன்படி சிரார்த்தங்கள் செய்தால் என்ன ஆகிறது. பொன்னாலான குடம் ஒரு பிராமணனுக்குக் கிடைக்கும். பிரிந்த ஆவி, பிதுர்லோகம் போயிற்றா, கீழே போயிற்றா, யாருக்கும் தெரியாது.

சிரார்த்தம் செய்ய, பொன்னாலான குடம், அது நிறையக் கெட்டியான வெண்ணெய்! பொன்னாலான குடத்தைச் செய்யுமளவுக்கு எவ்வளவு பேர்களுக்கு வசதிகள் இருக்கிறது? மகாவிஷ்ணு சொல்லியிருக்கிறார், கருடபுராணம் சொல்லிருக்கிறது என்று யாராவது மிகச் சிரமப்பட்டுப் பொன்குடத்தைத் தானம் செய்ய முன்வந்தால் என்னவாகும்? இறந்து

போனவனின் ஆவி சிரார்த்தம் வேண்டி அலைந்ததோ, என்னவோ தெரியாது, இவனும் இவன் குடும்பமும் பிச்சைவேண்டி வீதிகளில் அலையவேண்டியது அவசியமாகிவிடும். இறந்துபோனவனுக்காக இவ்வளவு கடுமையான சிரார்த்தங்களை—தானங்களை (பிராமணனுக்குத்) தர பலர் ஒருப்படமாட்டார்கள் என்பது பிராமணர்களுக்கும் தெரியும். விரும்பினாலும். மிகப்பலரால் முடியாது பொன்னால் செய்த குடம் தர, வெள்ளியால் செய்த குடை தர என்று தானம் கேட்டுக்கொண்டிருந்தால், சிரார்த்தம் தரவந்தவன் தான் செத்துப் போகத் தயாராகிவிடுவானே யொழிய தானம் வாங்கமுடியாது என்பதும் புரோகிதர்களுக்குத் தெரியும்.

"பொன்குடம் — மகாவிஷ்ணு அப்படித்தான் சொல்லியிருக்கிறார் — கருடபுராணம் அதைத்தான் விசேஷமாகச் சொல்லுகிறது. இல்லாவிட்டால் 'என்ன, பாதகமில்லை! ஒரு மண் குடத்தை வைத்துவிட்டால் போதும், அதைப் பொன்குடமாகப் பாவித்துவிடலாம்! அதில் நிறைய வெண்ணெய், வைத்துக் கொண்டுவாருங்கள்!'' என்று சிரார்த்தம் செய்யும் புரோகிதர்கள் சமாளித்துக்கொண்டனர். பொன் குடம் கிடைக்காது என்றால், மண்குடம் நிறைய வெண்ணெய், நெய், பாலாவது கிடைக்கட்டுமே போதும் என்பதுதான் அவர்களுடைய எண்ணம்.

இறந்தபின் மேலுலகம் அடைய செய்யப்படும் வழிகளில், கோதானமும் ஒன்று. தானங்கள், சிரார்த்தங்களின் மகிமையைக் கூறவந்த மகாவிஷ்ணு, கோதானத்தைப் பற்றியும் கருடனிடம் கூறுகிறார்.

"எவனொருவன் உயிருடன் இருக்கும் பொழுதே பிராமணர்களுக்குக் கோதானங்கள் தருகிறானே, அவன் வைத்ராணி நதியில் விழாமல் தப்புகிறான்.''

(இது கருடபுராண சாரோத்தரம், 8-வது அத்தியாயம், 24-ம் சுலோகத்தில் இருக்கிறது.)

இதற்கு அடுத்த இரண்டு சுலோகங்களில், பிராமணர்களுக்குத் தரப்படவேண்டிய தானங்கள் கூறப்படுகிறது.

"உபவாசம், கீதை, கங்காதீர்த்தம், துளசிப் பத்தரம், பகவான் பாதத்தில் பட்ட தீர்த்தம், அரிநாமம்—இவைகள் ஒருவனை எமவாதனைகளிலிருந்து மீட்கின்றன.

அவன், உணவு, கடைந்தெடுத்த வெண்ணெய் மாற்றுக்குறையாத பொன், கன்றையுடைய பசு—இவைகளை வேதோத்தமரான பிராமணனுக்குத் தரவேண்டும்.''

இறந்துபோகும் ஒருவனிடம், நரகவாதனைகளைச் சொல்லி புரோகிதர்கள் தானங் கேட்கும் வகைகளைப் பாருங்கள். அவன் அன்ன ஆகாரமில்லாமல் அவதிப்படும்பொழுது, குடும்பத்தினரும் உற்றார் உறவினரும் அழுது புலம்பிக்கொண்டிருக்கும் பொழுது, மற்றொரு பக்கத்தில் வேதமோதிகளுக்கு அறுசுவை அன்னம் படைக்கவேண்டும், இறுகிய வெண்ணெயைத் தரவேண்டும், பொன்னாலான குடங்களைத் தானம் செய்யவேண்டும், அத்துடன் பசுக்களை ஓட்டிவிடவேண்டும். பசு என்றால் மலடாகிப்போனப் பசுவைக் கொடுத்துவிட்டால், அதற்காகத்தான் "கன்றையுடைய பசு'' என்று முன்னெச்சரிக்கையுடன் புராணம் எழுதுகிறது. இவ்வளவு தானதருமங்களைச் செய்தால், என்ன பலன் கிடைக்கும்?

கருடனுக்கு உபதேசிக்கும் மகாவிஷ்ணு மிகச் சாமர்த்தியமான பதிலைத் தருகிறார். "நல்ல புத்திரனென்று சொல்லப்படுபவன் இந்தத் தானங்களைச் செய்தால், தந்தையின் உயிர் இவ்வுலகில் நீடிக்கும், அல்லது பிரிந்ததும் வாதனைகளிலிருந்து தப்பி மேலுலகம் போகும்.''

புராணங்களில் நம்பிக்கையிருந்து, கோதானம், சுவர்னதானம் முதலியவை செய்ய ஒருவனுக்கு வசதியுமிருந்தால், தானங்களை வாங்கிக்கொண்டதும் அவனுக்குச் சமாதானம் தரவும் வேதப்புரோகிதர்கள் தயாராக இருப்பார்கள். நோய்வாய்ப்பட்டிருந்த குடும்பத்தலைவன் பிழைத்துக்கொண்டால், எல்லாம் தானத்தின் பலன் என்று கூறிவிடுவார்கள். நோய்ப்பட்டவன் சீக்கிரத்தில் இறந்துவிட்டாலும் பாதகமில்லை. தானத்தின் பலனால் பிரிந்தவனின் ஆவி மேலுலகம் சென்றுவிடும் என்று சொல்லிவிடுவார்கள். ஆவி பிரிந்தாலும், பிரியாவிட்டாலும், பொன், பசு, செல்வம் ஒரிடத்திலிருந்து பிரிந்து வேதப்பிராமணன் வீட்டுக்குப் போய் நிச்சயமாகச் சேர்ந்துவிடும்.

இறந்தவனுடைய ஆவி மேலுலகம் அடைவதற்காகத் தரப்படும் பசுவிற்கு வைத்ராணி பசு என்று சொல்லப்படும். வைத்ராணி என்ற ஆற்றில், ஆவி விழுந்துவிடாமல் அந்தப் பசு காப்பாற்றுகிறதாம். அதனால் அந்தப் பசு வைத்ராணி பசு என்று பெயரிடப்பட்டது. வைத்ராணி பசு தரும் முறையைப் பற்றி அடுத்துக் கவனிக்கலாம்.

(தொடரும்)

வினாவும் விளக்கமும்

வினா : மாற்றார் தமிழகத்தில் அடிவைக்காத வண்ணம் சிறப்புற ஆண்ட தமிழக மன்னர்கள் ஆட்சிமுறையைப்பற்றி தங்கள் கருத்து என்ன ?

விளக்கம் : பண்டைத் தமிழக மன்னர்களின் அறிவுச் செறிவும், ஆற்றல் திறனும், செல்வச் செழிப்பும், ஆட்சிமாட்சியும் போற்றிப் பாராட்டி மகிழத்தக்கனவேயாகும்.

சேரசோழ பாண்டியர்களான பண்டைத் தமிழரசர்கள் தம்முள் போட்டியும் பொறாமையும் கொண்டு உள்நாட்டுப் போரிலும் பூசலிலும் சிற்சிலபொழுது ஈடுபட்டிருந்தார்கள் என்பது வருந்தத்தக்கது ஒன்று என்றாலும், அவர்கள், வேற்று நாட்டார்கள் தமிழகத்தில் அடியெடுத்துவைத்து ஆளா வண்ணம் அவர்களைத் துரத்தித்துரத்தி விரட்டி யடித்திருக்கிறார்கள். பண்டைத் தமிழக அரசர்களின் வீரம் இமயம்சென்று முட்டியது; காழகத்திற்கும் கடாரத்திற்கும் சென்று தங்கியது; ஈழம் சென்று விளங்கியது.

அவர்கள் காலத்தில் தமிழக வாணிபம் யவனம், சீனம், காழகம், கடாரம், ஈழம், சாவகம் போன்ற பகுதிகளில் சிறந்து விளங்கியது.

பண்டைத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி நின்று நிலவியது. இலக்கியக் கலை, ஓவியக் கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை, கூத்துக்கலை, விளையாட்டுக்கலை போன்ற பல் வேறு கலைகளையும் மிகச் சிறப்பாக வளர்த்து வந்தார்கள்.

பண்டை அரசர்கள் பல்வேறுவகைப் படைப்பயிற்சியில் தாங்கள் தேறியிருந்ததோடு நாட்டு மக்களையும் அதில் தேறும்படி செய்தனர்.

அரசாட்சி முறை, அக்கால உலக ஆன்றோரும், சான்றோரும் மிகவும் போற்றிப் புகழத்தக்கவாறு அமைந்திருந்தது.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால், அக்கால உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த அரசர்களின் வாழ்வைவிடத், தமிழக அரசர்களின் வாழ்வு பாராட்டத்தக்க சிறந்த ஒன்றாக அமைந்திருந்தது எனலாம்.

எனவே பண்டைத் தமிழக மன்னர்கள், சிறப்புற ஆண்டார்கள் என்ற வரலாற்று உண்மையை நாம் ஒப்புக்கொள்ளவே செய்கிறோம்.

வினா : இன்று தமிழகத்தின் வீரத்திற்குப் பெருமையாக இமயத்திற் கொடிபொறித்தோம், கங்கைகொண்டோம் என்றுதானே சொல்லுகிறோம் ?

விளக்கம் : ஆமாம் ! அந்த வீரத்தையும், அது பற்றி நாம் கொள்ளக்கூடிய பெருமையையும் நாம் மறைக்கவோ—மறுக்கவோ—மறக்கவோ செய்யவில்லை.

வினா : அத்தகைய பெருமைபடைத்த தமிழ் மன்னர்களால் அமைக்கப்பெற்ற திருக்கோவில்கள் மட்டும் வேண்டாதனவா ?

விளக்கம் : பண்டைத் தமிழரசர்களை அக்கால உலகச் சூழ்நிலைகளுக்கிடையே வைத்துப் பார்க்கும்போது சிறப்புக்குரிய சிலபல சீரிய நிலைமைகளையும், செயல்களையும் கொண்டிருந்ததால் அவைபற்றிய பெருமையையும் புகழையும் எண்ணி எண்ணி மகிழ்வுறுகிறோம். அவ்வளவுதான் !

அவர்களது செயல்களில் இற்றைக்காலத்திற்கும், கருத்திற்கும் ஒத்துவரக்கூடிய ஒரு சிலவற்றைத்தான் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக நாம் இருக்கிறோமே ஒழிய, அவர்களது செயல்கள் அத்துணையையும் நூற்றுக்கு நூறு அப்படியே ஏற்றுக்கொள்ள இயலாதவர்களாகவே இருக்கிறோம். " பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே " என்பதற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டிய இன்றியமையாத நிலைக்கு ஆட்படுகிறோம்.

பண்டைத் தமிழரசர் காலத்துக்குப் பொருந்திவந்த பலப்பல, இற்றைக்காலத்துக்கு அடியோடு பொருந்திவருவதில்லை. அவர்கள் கொண்டிருந்த வில்—அம்பு, வாள்—கேடயம், கோட்டைக் கொத்தளம், யானைப்படை—தேர்ப்படை, மாட்டுவண்டி, எழுத்தாணி—ஓலை, விளக்கெண்ணெய் விளக்கு, அரசன் மகன் அரசன் ஆளும் அரசுமுறை, பல மனைவியரை மணத்தல் போன்ற பலவும் இற்றைக் காலத்துக்குப் பொருந்திவருவதில்லை. அவைகளுக்கு மாற்றாக வேறுபல தோன்றிவிட்டன. பெருமைக்குரிய பண்டைத் தமிழரசர்கள் அவற்றைக் கொண்டிருந்தார்கள் என்பதற்காக அவற்றையெல்லாம் அப்படியே ஏற்று இன்றும் பழக்கத்தில் கடைப்பிடிக்கவேண்டும் என்று கூறினால், அது எவ்வகையிலும் பொருந்துவதாகாது.

ஒருசில செயல்கள் அந்தக்காலத்திலேயே கூட தேவையற்ற செயல்கள் என்று கருதப்படவேண்டியவைகளாகும். அப்படிப்பட்டவை அந்தக்காலத்துக்கும் தேவையில்லை, இந்தக் காலத்துக்கும் தேவை இல்லனவாகும். அப்படிப்பட்டவைகளிலே ஒன்றுதான் திருக்கோவில் எழுப்பியதாகும் என்று நாம் கருதுகிறோம்.

ஆண்டவனுக்குக் கோவில் எழுப்பும் திருவுள்ளம் படைத்திருந்தார்கள் என்பதற்காக அல்ல, நாம் பண்டைத் தமிழரசர்களைப்போற்றுவதும், பாராட்டுவதும், பெருமைப்படுத்துவதும். அவர்களிடத்தே காணப்பட்ட அறிவுக்கொத்த வீரம், ஆற்றல், பெருமை, புகழ் ஆகியவற்றிற்கே நாம் அவர்களைப் போற்றுகிறோம்.

பண்டைத் தமிழரசர்கள் அந்தக்காலத்தில் திருக்கோவில் எழுப்பியிருக்க வேண்டாமா என்றால், வேண்டாம்! வேண்டாம்!! வேண்டாம்!!! என்று இப்படியாக ஆயிரம் தடவைகள் வேண்டுமானாலும் நாம் கூறத் தயங்கோம்.

அந்தத் திருக்கோவில்கள் இப்பொழுது வேண்டாவா என்றால், இன்று வைதீகர்கள் கோவிலை வைத்திருக்கும் நோக்கத்தில் வேண்டாம் என்றுதான் கூறுகிறோம். அப்படியானால் அவைகள் அடியோடு இடித்துத் தள்ளப்படவேண்டியனவா என்றால், இல்லை! இல்லை!! இல்லை!!! என்று பலதடவைகள் கூறத் தயாராக இருக்கிறோம். அந்தத் திருக்கோவில்கள் எல்லாம் கண்காட்சிச்சாலைகளாகவும், அவற்றிலிருக்கும் கடவுட்சிலைகளும், பிற பொருள்களும் கண்காட்சிப் பொருள்களாகவும் மாற்றப்படவேண்டும் என்றுதான் சொல்லுகிறோம். தொழிற்சாலைகள், கலைக்கூடங்கள், பள்ளிக்கூடங்கள், நூலகங்கள், படிப்பகங்கள் போன்ற பல்வேறு அமைப்புகள் அத்திருக்கோவில்களில் நிறுவப்படலாம் என்றுதான் கூறுகிறோம். கட்டப்பட்ட திருக்கோவில்களை நாம் வேண்டாம் என்று சொல்லவில்லை: அவைகள் மேற்கூறியவாறு பயன்படுத்தப்படவேண்டும் என்றுதான் கூறுகிறோம்.

திருக்கோவில்களைப் பண்டைத் தமிழரசர்கள் கொண்டாடிய முறையில் நாம் கொண்டாட விரும்பவில்லை என்றால், அவர்கள் வேறு துறைகளில் பெற்ற புகழையும், பெருமையையும் நாம் அடியோடு குறைத்து மதிப்பிடுகிறோம் என்று பொருள்பட்டுவிடாது. பெருமையாக மதிக்கவேண்டியவைகளைப் பெருமையாக மதிக்கிறோம், ஏற்றுக்கொள்கிறோம்; பெருமையாக மதிக்கப்படவேண்டாதவைகளை நாம் மதிப்பதில்லை, ஏற்றுக்கொள்ளுவதுமில்லை. ஆண்டவனுக்குத் திருக்கோவில் எழுப்பும் நோக்கத்தை நாம் என்றும் போற்றவில்லை; ஏற்கவில்லை; ஆனால் கோவில்களிலுள்ள சிற்பக்கலையைக் கண்காட்சியாகப் போற்றலாம் என்கிறோம்.

எனவே திருக்கோவில்கள் வேண்டாதனவா என்று அருள்நெறித் திருக்கூட்டத்தார் போன்றவர்கள் கேட்பார்களேயானால். வைதீகர்கள் கொள்ளும் நோக்கத்தில் அவை வேண்டாதனவேயாம்; ஆனால் மேற்சொல்லிய வேறு வகைகளில் பயன்படுத்திக்கொள்ளக் கூடியனவேயாகும் என்றுதான் நாம் சொல்லுகிறோம்.

வினா : புலிகேசியைப் போர்முனையில் முறியடித்த நரசிம்மவர்மன் அல்லவா காஞ்சிக் கோவிலை எடுத்தான்? அவ்வீர உள்ளம் இறைவனிடத்தில் குழைந்ததைத் தாங்கள் மறுக்க முடியுமா?

விளக்கம் : காஞ்சிக் கோவிலை நரசிம்மவர்மன் எடுத்திருக்கலாம்; அந்த வரலாற்றுக் கருத்தை மறுத்துக்கூறவோ அல்லது அதற்குச் சான்றுகள் திரட்டவோ நாம் முற்படவில்லை. அதில் தகராறு எழுப்பவும் முனையவில்லை.

அந்த வீர உள்ளம் இறைவனிடத்தில் குழைந்திருந்ததாகக் கூறி, அதனை மறுக்க

வேண்டிய இன்றியமையாமையே நமக்கு இல்லை. ஒருவன் உள்ளம் இறைவனிடம் குழைந்திருந்தால்தான் அப்படிப்பட்ட கோயிலை எடுக்கமுடியும் என்பது ஒன்று மில்லை; அப்படிக் குழைந்திருந்தாலும் குழைந் திருக்காவிட்டாலும் ஒருவன் அப்படிப்பட்ட கோவிலை எடுக்கலாமே! நரசிம்ம வர்மனின் உள்ளம் எந்த இறைவனிடத்தில் குழைந் திருந்ததோ, அதே சைவ—வைணவ இறைவ னிடத்தில் குழையாமல், தன் அருமை மனை வியான மும்தாசுமகால் என்ற அம்மையிடம் குழைந்திருந்த சாசகானின் உள்ளம் உலக வியப்புக்களிலே ஒன்ருன தாசுமகாலை எடுத் திருப்பதைப் பார்க்கிறோம். 'கடவுள் பக்தி' மட்டுந்தான் அழகான கட்டிடத்தை எடுக்கும் என்ற நிலையில்லை; 'காதலன்பு'ம் அழகான கட்டிடம் எடுக்கும் என்று தெரியவருகிறதே! கடவுளிடத்து ஒரு சிறிதும் குழையாத உள் ளம்படைத்த உருசிய தலைவர்கள் காஞ்சிக் கோவிலைவிட பெரிய 'வியப்புக்குரிய கட்டிடங் களை எழுப்பியிருக்கிருர்களே! இறைவனிடம் குழைந்த உள்ளம் உருசிய நாட்டிலும், வேறு பல இடங்களிலும் தேவைப்படவில்லையே! இறைவனிடம் குழையாத உள்ளம் படைத்த எத்துணையோ அறிவியல் அறிஞர்கள் வியப் புக்குரிய கண்டுபிடிப்புக்கள் பலவற்றைக் கண்டுபிடித்திருக்கிருர்களே!

இறைவனிடம் குழைந்த உள்ளங்கொண் டிருந்த காரணத்தால்தான், நரசிம்மவர்மன் வீர உள்ளம் படைத்திருந்ததைப் போன்று, அருள்நெறித் திருக்கூட்டத்தார் கூறுகின்ற னர். நரசிம்ம வர்மனிடம் தோற்ற புலிகேசி 'நாத்திகன்' அல்ல; நரசிம்மவர்மனின் உள் ளம் இறைவனிடம் குழைந்திருந்ததைப் போன்றுதான் புலிகேசியின் உள்ளமும் இறை வனிடம் குழைந்திருந்தது! அப்படிப்பட்ட குழைவுள்ளங்கொண்ட புலிகேசி ஏன் தோற் ருன்? இறைவனிடம் கொள்ளும் குழைவுள் ளத்திற்கும், வீரத்திற்கும் தொடர்பில்லை என் பதைத்தான் அது காட்டுகிறது! இறைவ னிடம் குழைவுள்ளங் கொள்ளாதவனும் வீர ஞக இருக்கமுடியுமே, முடிகிறதே!

நரசிம்மவர்மனின் வீரத்தைப் போற்று கிறோம் என்ருல், அவன் எடுத்த திருக்கோவி லையும் போற்றவேண்டிய இன்றியமையாமை இல்லையே!

வீரத்திற்கும் இறைவனிடம் குழைவு கொண்ட உள்ளத்திற்கும் முடிபோட்டு, அதன்மூலம் குழைவு உள்ளத்தின் பெருமை யையும், தேவையையும் வற்புறுத்தவேண்டிய இன்றியமையாமை இல்லை என்பதை அருள் நெறித் திருக்கூட்டத்தார் உணரவேண்டும்.

நரசிம்ம வர்மன் புலிகேசியை வென்ற வீரத் தைப் போற்றுவோம்; ஆனல் அவன் திருக் கோவிலை எடுத்த இறைவனிடம் கொண்ட குழைவு உள்ளத்தைப் போற்றவேண்டிய தேவையில்லை; அந்தக் குழைவு உள்ளம் இதைவிடப் பயன தரத்தக்க வேறு நல்ல செய லுக்குப் பயன்பட்டிருக்கலாம் என்றுதான் நாம் எண்ணுகிறோம்.

அறிவும் ஆற்றலும் படைத்த நரசிம்ம வர்மன், தன்னுடைய உள்ளம் இறைவனிடம் குழையவேண்டுவது தேவையா அல்லவா என்று நம்மைக் கேட்கிருன் என்று வைத்துக் கொண்டால், " அது தேவையில்லை, பகுத்தறி வோடு, எல்லோரிடமும் குழைவு உள்ளத் தோடு வாழ், அதுவே போதுமானது" என்றுதான் நாம் சொல்லியிருப்போம்.

இறைவனிடம் கொண்டிருந்த குழைவு உள்ளந்தான் நரசிம்ம வர்மனுக்கு வீரத்தைத் தந்தது என்று அருள்நெறித் திருக்கூட்டத் தார் கூறுவார்களேயானல், அதனை நாம் மறுக்கிறோம்; அப்படிப்பட்ட குழைவு உள்ளம் இல்லாமலேயே அப்படிப்பட்ட வீரத்தை அவன் பெறமுடியும் என்றுதான் சொல்லு கிறோம்!

அறிவுப் புதிர் 3 - விளக்கம்

சரியானவை : 1, 5, 6. தவறானவை : 2, 3, 4, 7.

1. நமது உணவில் அடங்கியிருக்கும் உப்பு உடலின் மூல உறுப்புக்களிலிருக்கும் நீரை இழுத்து, கழிவுப்பொருள்களை வடிகட்டும் சிறுநீர்ப்பைக்கு அனுப்பும் வேலையை இடைவிடாமல் செய்கின்றது. உப்பு இழுக்கும் நீரின் அளவு குறைவு என்றாலும் அதிகமான அளவு உப்பு உணவில் சேரும்போது மூல உறுப்புக்களிலிருந்து அது இழுக்கும் நீரின் அளவும் அதிகமாகின்றது. அப்போது மூல உருப்புக்களுக்குத் தேவையான நீர் குறைய, அதை நிறைவு செய்யும்பொருட்டு நீர் வேட்கை ஏற்பட்டு தேவையான நீர் கொள்ளப்படுகின்றது.

2. முகம் வெளுப்பதற்கு உணர்ச்சி நரம்புகள் காரணமல்ல. முகத்தின் தோலுக்குத் தனியே ஒரு நிறம் உண்டென்றாலும், முகத்தின் நிறம் பெரும்பாலும்—சிவந்த மேனியுடையவர்களுக்கு—முகத்தின் மேற்பரப்பில் ஓடும் இரத்தத்தின் நிறமேயாகும். இரத்த ஓட்டம் இருதயத்தால் இயக்கப்படுகின்றது. திகில் கொள்ளும்போது மூளையிலிருந்து இருதயத்திற்குச் செல்லும் நரம்புகள் இடையில் புகுந்து இரத்த ஓட்டத்தைத் தடைசெய்ய, அதனால் முகத்தோலின்கீழுள்ள இரத்தக்குழாய்களில் இரத்தம் இல்லாதுபோகவே வெளுப்பு நிறம் ஏற்படுகின்றது.

3 உடலின் மற்ற பாகங்களைவிட முகத்திற்கெனத் தனியாக உணர்ச்சி நரம்புகள் எதுமில்லை பழக்கத்தின் காரணமாகத்தான் நாம் முகத்தை மூடுவதில்லை. குளிரையும் வெப்பத்தையும் பற்றிய உணர்ச்சி நரம்புகளின் அறிவுப்புகளை நாம் பொருட்படுத்துவதில்லை; அதைப் பழக்கமாகக்கொண்டுவிட்டோம். அதிக வெப்பத்தைத் தாங்காது முகம் கருத்துவிடுவதை நாம் காணலாம். முகத்தை மூடாமலிருப்பதற்குக் காரணம் கண், வாய், மூக்கு, செவி முதலிய புலனுறுப்புகள் இருப்பதால்தான்.

4. பொருள்களை ஒரு கண்ணால் பார்ப்பதற்கும் இரண்டு கண்களால் பார்ப்பதற்கும் வேற்றுமை உண்டு. ஒரு கண்ணால் பார்க்கும்போது பொருள்களில் ஆழம் தோன்றாது, தட்டையாகத் தோன்றும். அதாவது, பொருள்கள் பலவற்றிற்கும் இடையிடையே உள்ள தூரங்களையும் பொருள்களின் வடிவ வளைவுகளையும் இரண்டு கண்களால்தான் காணமுடியும். இரண்டு கண்களும் தனித்தனியான கோணங்களில் உருவங்களை எடுத்துத் தருவதால் பொருள்களின் ஓரத்தைச் சுற்றிலும் சிறிது காணமுடிறது, இதனால்தான் இரு கண்களால் நோக்கும்போது பொருள்களில் ஆழம் தெரிகிறது.

5. ஒவ்வொரு உள் காதிலும் உடல் அசைவுகளை சமநிலைப்படுத்தும் உறுப்பு ஒன்று இருக்கிறது. இரண்டு பைகளுடன் சேர்க்கப்பட்ட மூன்று சிறு வாய்க்கால்கள், அகலம் - நீளம் - உயரம் என்றபடி அமைந்திருக்கிறது. வாய்க்கால்களில் ஒருவகைத் திராவகம் உள்ளது. உடல் மேலும் கீழும் அசைந்தால் உயரவடிவுள்ள வாய்க்காலிலும், பக்கவாட்டில் அசைந்தால் நீளவடிவுள்ள வாய்க்காலிலும், முன்னும் பின்னும் அசைந்தால் அகல வடிவுள்ள வாய்க்காலிலும் அந்தத் திராவகம் அசைந்து நரம்புமுனைகளைத் தொடுகின்றன. நரம்புகள் அச்செய்தியை மூளைக்கு எடுத்துச்செல்லுகின்றது. மூளையிலிருந்து பிறக்கும் உத்தரவுகளை நரம்புகள் பெற்றுச்சென்று உடல் அசைவைச் சமநிலைபடுத்தத் தூண்டுகிறது.

6. நம்மையறியாமல் நமது கைவிரல் ஏதாவது நெருப்பின்மேல் பட நேர்ந்தால் உடனே கையை இழுத்துக்கொள்ளுகிறோம். இந்தச் செய்கைக்குக் காரணமான உணர்ச்சி நரம்புகளுக்கு மூளையிலிருந்து உத்தரவுகள் வருவதில்லை; முதுகெலும்பிலுள்ள முதுகுத்தண்டு (Spinalcard) நரம்பிலிருந்து வருகின்றது. உடம்பிலுள்ள உணர்ச்சி நரம்புகளெல்லாம் முதுகுத் தண்டோடு இணைக்கப்பட்டு அதன்மூலம் தான் உணர்ச்சி அறிவிப்புகள் மூளைககு எடுத்துச் செல்லப்பட்டு, உத்தரவுகளும் திருப்பியனுப்பப்படுகின்றன. ஆனால் அவசரமான சமயங்களில் நேரம் வீணாகாமல் முதுகுத்தண்டே உத்தரவுகளைத் தந்து உடலைக் காப்பாற்றுகின்றது. தூங்கும்போது நேரிடும் பல செய்கைகள் முதுகுத்தண்டின் அறிவிப்பின் பேரிலேயே நடைபெறுகின்றன.

7. ஒரே எலும்பாக இருந்தால் முதுகெலும்புதான் உடலின் பெரிய எலும்பாகும். ஆனால் முதுகெலும்பு பல முள் எலும்புகளால் (Vertebra)ஆன ஒரு சேர்வை எலும்பாகும். இதனால்தான் நாம் குனியவும் வளையவும் முடிகிறது.

உடலிலுள்ள அதிக நீளமுடைய எலும்பு தொடை எலும்பாகும்.

எபிக்கூரசு

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

லவே உயிரும் அணுக்களாலானவை யென்றும், இறப்பின்போது உடல் அழிந்து அணுக்களாக மாறுவதைப்போலவே உயிரும் பிரிந்து அணுக்களோடு அணுவாக சேர்ந்துவிடுகிறதென்றும்; உடலைவிட்டுப் பிரிந்த உயிருக்கு உணர்ச்சியோ, எண்ணமோ, நினைவோ வாழ்வே இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

எபிக்கூரசு 71 ஆண்டுகள் உயிர்வாழ்ந்தபின் கி. மு. 270-ம் ஆண்டில் இயற்கையெய்தினார். அவரது கொள்கைகளை ஏற்க மறுத்த மதவாதிகள் அவரது நூல்களை உலகத்தாரின் பார்வையினின்றும் மறைத்தனர் என்றாலும் அவரது கருத்துக்கள் சுடர்விட்டு ஒளி வீசிக்கொண்டே இருக்கின்றன. அறிவு வேட்கைகொண்டு, மூடநம்பிக்கைகளை ஒதுக்கித்தள்ளி, பொருள்களை ஆராயும் ஒவ்வொருவரின் உள்ளத்திலிருந்தும் எபிக்கூரசு வெளிப்படுகிறார். எபிக்கூரசு கிரேக்கம் தந்த உலகப் பேரறிவாளர்களில் மிகச்சிறந்த ஒருவராவார்!

Regd. No. M 6296 MANRAM

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்த்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்"

மலர் - 3 1954 - 55

24 இதழ்கள் கொண்ட பைண்ட் செய்யப்பட்ட மலர்

ஒன்று

விலை ரூ. 8 0 0

(தபாற்செலவு உட்பட)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.
வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 10 வீதம் அனுப்பவேண்டும்.)

விபரங்கட்கு :

"மன்றம்"

26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
MANRAM ACHAKAM, 26, Nainiappan St. Mannadi, MADRAS-1.